விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
# VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 13 ஞாயிற்றுக்கிழமை (29.09.2002) தொலைபேசி- 2223378 ஒலி 284





நேற்று நடைபெற்ற யுத்தக் கைதிகளின் பரிமாற்றத்தின் போது கேணல் தீபன் மற்றும் பானு ஆகியோருடன் லயனல் பலகல்ல (நடுவில்) உரையாடும் காட்சியை முதலாவது படத்திலும் விடுதலை பெற்ற சாகரவர்த்தனா கப்பல் கப்டன் அஜித் குமார போயாகொடவை இரண்டாவது படத்திலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ கேணல் தீபனுக்கு கைலாகு கொடுப்பதையும் நடுவில் செஞ்சிலுவைச் சங்கத்தின் வதிவிடப் பிரதிநிதி நிற்பதையும் மூன்றாவது படத்தில் காணலாம். படங்கள்: அன்ரனி ஜீவா

## உறவினர்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிய

# அரசும்-விடுதலைப்புலிகளும் நேற்று யுத்தக் கைதிகளைப் பரிமாறினர்



கூடிக் களித்த நினைவுகளுடன் விடுதலை பெற்ற போராளியை ஆரத் தழுவும் சுதா



## ஓமந்தையில் சமாதானத்தின் பரிசு

(ஓமந்தையில் இருந்து நமது நிருபர் அன்ரனி ஜீவா)

**20 வருட கால தமிழீழ மண்மீட்புப் போரியல் வரலாற்றில் சமாதான முன் முயற்சிகளின் மத்தியில் சிறிலங்கா அரசிற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான யுத்தக் கைதிகள் பரிமாற்றம் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு ஓமந்தையில் இடம்பெற்றது.**

**இக் கைதிகளின் பரிமாற்றத்தின் போது விடுதலைப் புலிகள் 7படையினரையும், அரசு 13 விடுதலைப்புலி உறுப்பினர்களையும் உறவினர்களின் சந்தோஷ உணர்ச்சிப் பிரவாகத்தின் மத்தியில் விடுதலை செய்தனர்.**

ஓமந்தையில் நேற்றுக் காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இக் கைதிகள் பரிமாற்றம் சுமூகமான சூழ்நிலையில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது. இதன் போது பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

அரசாங்கத்தினால் விடுவிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலி உறுப்



ஆனந்தக் கண்ணீர் விடும் உறவு...



# ஓமந்தையில் சமாதானத்தின் பரிசு



கூடிக் களித்த நினைவுகளுடன் விடுதலை பெற்ற போராளியை ஆரத் தழுவும் சுதா



ஆனந்தக் கண்ணீர் விடும் உறவு...

**(ஓமந்தையில் இருந்து நமது நிருபர் அன்ரனி ஜீவா)**

**20 வருட கால தமிழீழ மண்மீட்புப் போரியல் வரலாற்றில் சமாதான முன் முயற்சிகளின் மத்தியில் சிறிலங்கா அரசிற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான யுத்தக் கைதிகள் பரிமாற்றம் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு ஓமந்தையில் இடம்பெற்றது.**

**இக் கைதிகளின் பரிமாற்றத்தின் போது விடுதலைப் புலிகள் 7படையினரையும், அரசு 13 விடுதலைப்புலி உறுப்பினர்களையும் உறவினர்களின் சந்தோஷ உணர்ச்சிப் பிரவாகத்தின் மத்தியில் விடுதலை செய்தனர்.**



8வருடங்களின் பின் போயாகொட மனைவியுடன்

ஓமந்தையில் நேற்றுக் காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இக் கைதிகள் பரிமாற்றம் சுமூகமான சூழ்நிலையில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது. இதன் போது பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

அரசாங்கத்தினால் விடுவிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் 11பேரும் முன்னதாக நேற்றுக்காலை உலங்குவானூர்தி மூலம் வவுனியாவுக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இதேபோல் தமிழீழ விடுதலைப்புலிகளினால் விடுதலை செய்யப்பட்ட 7படையினரும் கிளிநொச்சியில் இருந்து தமிழீழக் காவல் துறையினரின் பாதுகாப்புடன் ஓமந்தைக்கு அழைத்து வரப்பட்டனர்.

### கைதிகள் பரிமாற்றத்தில் கலந்து கொண்டோர்

கைதிகள் பரிமாற்றம் நடைபெற்ற போது அதில் கலந்து கொள்வதற்கு இலங்கை அரசின் தரப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, விமானப்படைத் தளபதி ஏயர் மார்ஷல் ரொனிக் பெரேரா, கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் தயாசந்தகிரி, (10ம் பக்கம் பார்க்க)



சிறைவாசம் முடிந்து வெளியேறும் புலிகள்...

# புலிகளால் நேற்று விடுதலை செய்யப்பட்ட இராணுவத்தினர் பிரதமருடன் சந்திப்பு

(கொழும்பு)

ஓமந்தையில் நேற்றுக்காலை விடுவிக்கப்பட்ட 7இராணுவத்தினரும் நேற்று மாலை 4.30 மணியளவில் கொழும்பு சென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இக் கலந்துயையாடல் பிரதமரின் வாசஸ்தலமான அலரி மாளிகையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலின் போது சிறைப்பிடிக்கப்பட்டவர்களின் சேம நலன்களை பிரதமர் விசாரித்து அறிந்து கொண்டார்.

இதன் பின்னர் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உரையாற்றும் போது:

தென்னிலங்கைச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் விரைவில் விடுதலை செய்யப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவுள்ளது.

தென்னிலங்கையில் தடுத்து வைக்கப்பட்ட பெரும்பான்மையானோர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களது வழக்குகள் துரிதப்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

காணாமல் போன படையினர் விவகாரம் பெரிய பிரச்சினையாக உள்ளது. எந்தவொரு கைதியும் தங் (10ம் பக்கம் பார்க்க)

**கைதிகள் பரிமாற்றம்**

# மேலும் 100 கைதிகள் விடுதலை பெறுவர்

(கொழும்பு)

பயங்கரவாத, அவசரகாலச் சட்டங்களின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்து. தென்னிலங்கை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் நூறு தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளதாக பதில் சிறைச்சாலை ஆணையாளர் எஸ்.ரி.ஜே.பண்டாரகம தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கைச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்களை விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று அரசினால் விடுவிக்கப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கையில் தென்னிலங்கைச் சிறைகளில் (10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மீளக் குடியமர்ந்த தென்மராட்சி வாழ் மக்களுக்கு உதவுதொகை 25 ஆயிரம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்ளுக்கு மீளக்குடியமர்வு நிதியாக25 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

ஏற்கனவே இருந்து வந்துள்ள விதி முறைப்படி மீள்குடியமர்வு நிதியாக 15 ஆயிரம் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இடம்பெயர்வினைத் தொடர்ந்து பல்வேறு இழப்புக்ளுக்கு மத்தியில் மீளக்குடிமர்கின்ற குடும்பங்களுக்கு 15 ஆயிரம் ரூபா போதாது எனவும், அத்தொகை அதிகரிக்கப்பட்டு 26 ஆயிரம் ரூபாவாக வழங்சப்படவேண்டுமெனவும் தமிழர் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்தே இத்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாகஅறியப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக சுற்றறிக்கை விரைவில் யாழ், அரச செயலகத்திற்கு அனுப்பப்படும் எனவும் தெரியவருகிறது. (உ-77)

## பனை தறிக்கப்படுவதாக சாவகச்சேரி மக்கள் புகார்

(தென்மராட்சி)

பாதுகாப்புப் படையினர் பனை, தென்னை மரங்களைத் தறிப்பதில் ஈடுபடமாட்டார்களென பாதுகாப்பு அமைச்சரின் செயலாளரான ஒஸ்ரின் பெர்னாண்டோவினால் ஜூலை மாதம் வாக்குறுதியளிக்கப்பட்ட போதிலும்கூட சாவகச்சேரி டச்சு வீதி, இடைக்குறிச்சி பகுதிகளில் பனை, தென்னை மரங்கள் தொடர்ந்தும் சட்டவிரோதமாக கண்டபடி படையினரால் தறிக்சப்பட்டு வருவதாக இப்பகுதி மக்கள் பிரதேச செயலரிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக தென்மராட்சி பிரதேச செயலர் யாழ். அரசாங்க அதிபர் ஊடாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார் எனத்தெரியவருன்றது.

இதேவேளை, தென்மராட்சிப்பிரதேசத்தில் அனுமதியின்றி பனை தறிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிபெற்று தறிக்கப்படும் ஒரு பனைக்கு தலா 100 ரூபா பனை மீள் நடுகைக்கான கட்டணமாகச் செலுத்தப் படவேண்டும்.

அதேவேளை, அனுமதி பெறாமல் பனைமரம் தறிப்போரிடம் இருந்து தண்டப் பணம் அறவிடுவதென முடிவு செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-77)

## கைதிகள் பரிமாற்ற நிகழ்வு மகிழ்ச்சியானசம்பவம்அல்ல

### விடுதலையான புலிப்போராளி தெரிவிப்பு

(ஓமந்தை)

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே நேற்று இடம்பெற்ற கைதிகள் பரிமாற்றம் என்னைப்பொறுத்த அளவில் ஒரு மகிழ்ச்சிகரமான சம்பவம் அல்ல என்று நேற்று விடுதலையான விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

தனது விடுதலைதொடர்பாகஅந்த உறுப்பினர்மேலும் தகவல் தருகையில்

தென்னிலங்கையில் இன்னமும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் யுவதிகள்சிறையில் வாடுகின்றனர்' இவர்கள் அனைவரும் என்று விடுதலை செய்யப்படுகிறார்களோ அப்போது தான்நான் சந்தோஷப்படுவேன் என்று கூறினார். (ம)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களை மீளக் குடியமர்த்தும் பணியில் புலிகள் ஆர்வம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்தமக்களை மீளக்குடியமர்த்தும் பணிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டுவருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்கிரரமங்களை 35, 37, 38ஆம் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்து துறைநிலாவணை குருமண்வெளி போன்ற இடங்களில் வாழ்ந்துவந்த மக்களை அவர்களது சொந்தப் பிரதேசங்களில் குடியமர்த்துப் பணிகளில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டுவருகின்றனர்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக தமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினரால் வக்கியெல்லை 35ஆம் கிராமம் ஸ்ரீநாராயணன் ஆலயமுன்றலில் மக்களை மீளக்குடியமர்த்துவதுதொடர்பாக நேற்று காலை கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. (உ8)

## 19வது திருத்தச்சட்ட மூலத்திற்கு எதிரான மனுக்களை விசாரிக்க ஐவர் நியமனம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைக்கும் 19வது அரசியல் அமைப்பு திருத்தச்சட்ட மூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணை செய்வதற்கு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் 5 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்

பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவினால்இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 19வது அரசியல் அமைப்பு திருத்தச் சட்ட மூலத்திற்குஎதிராக கடந்த 26ம் திகதி வரை 32 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொதுஜன ஐக்கிய முன்முன்னணி, லங்காசமசமாஜ கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியகட்சிகள் உட்பட தனிநபர்களின் மூலமாக 32 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதும் அனைத்து மனுக்களையும் ஒன்றாக விசாரணை செய்யதீர்மானிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## திலீபன் நினைவுதின ஏற்பாட்டுக்குழு நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வியாழனன்று நடைபெற்ற தியாகி திலீபனின் நினைவு தினத்தை ஆறுவருட இடைவெளிக்குப் பின்பு உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க ஒத்துழைத்த சகல பொது அமைப்புகளுக்கும் திலீபன் நினைவுதின ஏற்பாட்டுக்குழு தனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துள்ளது.

எதுவித தூண்டுதலும் இன்றி தாமாகவே முன்வந்து வர்த்தக நிலையங்கள், தனியார் மற்றும் பொது நிறுவனங்கள், வாகனங்கள், முச்சக்கர வண்டிகள், பொதுத்துறை ஆகியவற்றின் செயற்பாடுகளை நிறுத்தி நிகழ்வுகளில் கலந்து கொண்ட சகலருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## யுத்தத்தால் பாதிப்புற்ற சிறுவர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான சர்வதேச மாநாடொன்று எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு ரான்ஸ் ஏசியா ஹொட்டலில் நடைபெறவுள்ளது.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள மேற்படி மாநாட்டில் அனைத்துலக நாடுகளையும் சேர்ந்த 250 ற்கும் அதிகமான கல்வியியலாளர்கள் மற்றும் சிறுவர் நிறுவனங்களில் அக்கறை உடையோர் பங்குபற்றவுள்ளனர்.

யுத்தத்தால் சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உளசமூக உதவிகள் குறித்து ஆராயப் படவுள்ள மேற்படி மாநாட்டில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து உளமருத்துவத்துறை பேராசிரியர் தயாசோமசுந்தரம் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு இணைப்பாளர் ஸ்ரீபன் சுந்தரராஜ உளசமூக பயிற்றுவிப்பாளர்கள் ரீ. மயூரன், எஸ். பிறேமலோஜி மற்றும் மருத்துவபீட மாணவன் எஸ். செந்தூரன் ஆகியோர் செல்லவுள்ளனர்.

மேற்படி மாநாடு சிறுவர் பாதுகாப்பு - ஐக்கிய இராச்சியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-27)

## பௌத்த மதத்தலைவர்களுக்கு சமாதானப் பேச்சுக்குறித்து பிரதமர்விளக்கம் அளிப்பார்

(கொழும்பு)

அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே தாய்லாந்தில் நடைபெற்று வரும் சமாதானப்பேச்சுவார்த்தைகள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அஸ்கிரிய மல்வத்தை பீடாதிபதி உட்பட பல பௌத்த மதத்தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இச்சந்திப்புக்கு முன்னதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கட்சித்தலைவர்கள், பௌத்த மதத்தலைவர்கள் உள்பட பலரிடம் சமாதான முயற்சிதொடர்பான கருத்துக்களையும் கேட்டறியவுள்ளார்.

தாய்லாந்தில்அடுத்தமாதம் 31ம் திகதி நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு முன்பாக அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகள் மற்றும் மதத்தலைவர்களைச் சந்தித்து தாய்லாந்தில் நடந்து முடிந்த முதலாவது கட்ட பேச்சுவார்த்தைகள் தொடர்பாக பிரதமர்விளக்கமளித்து அவர்களது கருத்துக்களைக் கேட்டறியவுள்ளார். (ம)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(தென்மராட்சி)

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் எதிர் வரும் 5 ஆம்திகதி யாழ். அரசசெயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளின் தலைவர்களும் பங்கு கொள்ளவுள்ளனர். (உ-77)

★ ★ ★

(சுதுமலை)

வலிகாமம் மேற்கு (சங்கானை) பிரதேச செயலர் பிரிவின் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை மு:ப.10.00 மணிக்கு பிரதேச செயலர் செ.இரத்தினம் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-252)

## தென்மராட்சிபஸ்சேவைக்கு போதிய வசதிகள் இல்லை

### வ. பி. போக்குவரத்துச் சபை கைவிரிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள இடங்களுக்கு பஸ் சேவையை மீளவும் நடாத்துவதற்குவடபிராந்தியபோக்குவரத்துச்சபையிடம் போதிய பஸ் வண்டிகளும் ஆளணியும் இல்லை.

என்று வடபிராந்தியபோக்குவரத்துச்சபையின் பொது முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தென்மராட்சி பிராதசத்திலுள்ள பல்வேறு தரப்பினரும் தமது கடும் ஆட்சேபனைகளைத்தெரிவித்துள்ளனர்.

மீளக்குடியமர்ந்துள்ள பிரதேசத்தில் பொதுமக்களின் போக்குவரத்துக்கு வேண்டிய பஸ சேவைகளை ஆரம்பிப்பதில்குறித்த சபை அசமந்தப் போக்கினையே கடைப்பிடித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

தெனமராட்சி பிரதேசத்தில் பாதை இலக்கங்களான 794, 775, 809, போன்ற பாதைகளுக்கு அவசியம் பஸ் சேவைகள ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை பாதை இல, 794க்கு தனியார் சிற்றூர்தி சங்கம் இரு பஸ்சேவைகளை தினசரி நடாத்திவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (இ-77)

## பள்ளிச் சிறார்க்கு அப்பியாசக் கொப்பிகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினமான எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மகளிர் அபிவிருத்தி நிலையம் யாழ். செட்டியார் தெரு தமிழ்க் கலவன் பாடசாலை, யாழ். உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை யாழ். உயரப்புலம் மெ. மி த. க. வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளில் உள்ள 200 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கவுள்ளது.

இவ் அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் வைபவம் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெறும். (உ)

## இறுதிப் போட்டியும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற்கல்லூரி விளையாட்டு அவை நடாத்தும் ஞாபகார்த்த சுற்றுப்போட்டிகளின் இறுதியாட்டங்களும், பரிசளிப்பு நிகழ்வுகளும் இன்று கல்லூரி விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

பீடாதிபதி திரு கமலநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளுக்கு யாழ். மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரை முதன்மை விருந்தினராக கலந்துகொள்கின்றார்.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டிகளில் காலை 9 மணிக்கு நடைபெறும் துடுப்பாட்டப் போட்டியில் யாழ். போதனா வைத்திய சாலை அணியை எதிர்த்து வலயம் 1 விளையாட்டுக் கழகமும் மாலை 3 மணிக்கு நடைபெறும் வலைப்பந்தாட்டப்போட்டியில் பலாலி ஆசிரியர் கலாசாலை அணியை எதிர்த்து மாவட்ட செயலக அணியும், நடைபெறும்.

மாலை 5-30 மணிக்கு நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். மதுவரித் திணைக்களத்தை எதிர்த்து, பலாலி ஆசிரியர் கலாசாலையும், மாலை 7-30 மணிக்கு கரப்பந்தாட்டப்போட்டி தேசியக் கல்வியியற் கல்லூரியை எதிர்த்து பலாலி ஆசிரியர் கலாசாலையும் விளையாடுகின்றன. (இ-5)

## இரராசி பலன்

29-9-2002

(புரட்டாதி 13, ஞாயிறு)
அட்டமி வை 5 40வரை
மிருகசீரிடம் மு.ப8.11 வரை
இராகுகாலம்-4 32-6 02
நல்ல நேரம் 9.02- 10.32
அட்டமி, நவமி

**மேடம்**
நினைத்த காரியம் கைகூடும், கூட்டு முயற்சி, பொருள்சேர்க்கை, அன்னியர் சந்திப்பு.

**இடபம்**
முயற்சி தாமதம், வாக்கு கலகம், தனவிரயம், மாதர் நட்பு

**மிதுனம்**
தெய்வ சிந்தை, புதிய முயற்சி, உறவினர் வருகை, சயன சுகம்.

**கடகம்**
தேவையற்ற அலைச்சல், பொருள் விரயம், பெரியோர் ஆதரவு, தொழில்சஷ்டம்.

**சிங்கம்**
தெய்வசிந்தை, கீர்த்தி, குடும்பத்தில் நல்ல சம்பவம், காரியசித்தி.

**கன்னி**
நல்ல செய்தி, அதிகாரம் முயற்சி கைகூடும், நண்பர்கள் உதவி.

**துலாம்**
மனச்சோர்வு, காரியதாமதம் புதிய தொழில் சிந்தை, கட்டுப்பாடு.

**விருச்சிகம்**
உறவினர் வெறுப்பு, காரிய தடங்கல், பிரயாண பயம், அடகீர்த்தி.

**தனுசு**
நிலைமாற்றம், குடும்ப மகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், தனலாபம்.

**மகரம்**
ஆரோக்கிய விருத்தி, முயற்சி நிறைவேறும், சுவாரஷ்யம், தொழில் சிந்தை.

**கும்பம்**
குடும்பக் கவலை, உடல் நலக் குறைவு, கௌரவக் குறைவு, காரியதாமதம்.

**மீனம்**
ரோக பயம், இலட்சுமிகரம், தாய்வழிஉறவு, கல்வியில் ஆர்வம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# சமாதானம் அர்த்தம் உள்ளதாவதற்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும்

## ஒஸ்லோ பல்கலை பேராசிரியர் சண்முகரத்தினம்

(தென்மராட்சி)

சமாதானம் என்பது அர்த்தம் உள்ளதாக இருக்கவேண்டுமானால் அவர்களுடைய வாழ்க்கையை, சமூக நலனை மேம்பாடுடையதாக மாற்ற வேண்டும். சட்டரீதியாக அதன் மகத்துவத்தை உணர வேண்டும். அப்போதுதான் இந்தச் சமாதானம் எமக்கான சமாதானம் என அவர்கள் உண்மையாக ஏற்றுக் கொள்வார்கள்.

இவ்வாறு ஒஸ்லோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் என். சண்முகரத்தினம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் 'சமாதானம்- அபிவிருத்தி- இடைக்காலம் ஒரு நோக்கு' எனும் பொருளில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

இளம் பொருளியலாளர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பேராசிரியர் என். சண்முகரத்தினம் தொடர்ந்து உரையாற்றுகையில்-

தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சியானது மேலிருந்து கீழான நிலையிலேயே இருக்கின்றது. பொதுவாக யுத்தம் இடம்பெறும் இடங்களில் சமாதான முயற்சிகள் மேலிருந்துகீழான நிலையில்தான் இடம்பெறுவது வழக்கமாகும். இந்த நோக்கு வலுப்படுத்துவதற்கு நீண்டகாலம் எடுக்கும். ஆயினும் நிலையான, ஸ்திரமான சமாதானம் ஏற்பட கீழ் இருந்து மேலான நிலைக்குச் செல்கின்ற போதுதான் மக்களின் உண்மையான பங்களிப்பு உருவாகும்.

சமாதானத்துக்கும் அபிவிருத்திக்கும் இடையில் நெருங்கிய உறவு உள்ளது. சமாதானம் அபிவிருத்திக்குரிய உகந்த ஒரு சூழ்நிலையாக இருக்கலாம். ஆனால் அபிவிருத்தி என்பது எப்போதுமே சமாதானத்துக்கு சாதகமான போக்காகும்.

நாட்டில் யுத்தம் இடம்பெற்றுள்ளது. யுத்த சூழ்நிலை முற்றாக மாற்றப்படும் வரை அந்த யுத்தம் முடிந்துவிட்டது என்று சொல்லமுடியாது. சமாதானம் வந்து விட்டது என்றும் சொல்ல முடியாது.

இலங்கையில் இன்று சமாதானத்துக்கான சூழல் ஏற்பட்டுள்ளது. எட்டு மாத கால யுத்த நிறுத்த நன்மைகளை மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதனால்வட-கிழக்கில் ஒரு இடைக்கால நிர்வாகம் ஏற்படலாம் என்ற நம்பிக்கை தென்படுகிறது. இந்த சமாதானம் நிரந்தரமாக இருப்பதற்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெருந்தொகையான மக்கள் அந்த சமாதானத்துக்கான பயனைப் பெறுவதற்கு எத்தகைய அபிவிருத்திக் கோட்பாடு உருவாக்கப்படவேண்டும் என்ற வினா எம்முன் தோற்றம் பெறுகின்றது.

இலங்கையிலுள்ள வட கிழக்கில் சமாதானம், அபிவிருத்து ஏற்படுத்துவது தொடர்பாக அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளில் கருத்தரங்குகள், மாநாடுகள் துரிதமாக இடம்பெற்று வருகின்ற வேளையில் வட-கிழக்கில் இவைபற்றியவிழிப்புணர்வோ அல்லது தெளிவு நிலையோ ஒரு சதவீதம் கூட இடம் பெறாமல் இருப்பது வேதனைக்குரியதாகும்.

வடக்கு-கிழக்கில் இரு பல்கலைக்கழகங்கள் இருக்கின்ற போதிலும் கூட இக்குறிப்பிட்ட விடயத்தில் புத்திஜீவிகளோ அல்லது மாணவர்களோ அக்கறைகாட்டாமல் இருந்துவருவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது என்று குறிப்பிட்டார்.

(உ-77)

## புதிய குடும்ப அட்டைகள் வழங்கல்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் ஜே/300 கிராமசேவையாளர் பிரிவிலுள்ள குடும்பங்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருவதால், அவற்றினை உடன் பெற்றுக் கொள்ளும்படி கிராமசேவையாளர் கே. இராசரத்தினம் கேட்டுக்கொண்டுள்ளார்.

(உ-77)

## மின் விநியோகம் கட்டம் கட்டமாக ஆரம்பம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரப்புறம் மற்றும் அரசடிப்பகுதிக்குமின் பிறப்பாக்கி மூலம் விரைவில் மின்விநியோகம் செய்யப்படவுள்ளது.

இதுதொடர்பான ஆரம்பப் பணிகளை இலங்கை மின்சார சபை 10இலட்சம் ரூபா செலவில் மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை, தென்மராட்சி பிரதேசத்தில் மின்விநியோகப் பணிகளுக்கான புனரமைப்பு வேலைகளைச் செய்வதற்கு 183மில்லியன் ரூபா தேவை என இலங்கை மின் சார சபை மதிப்பீடு செய்துள்ளது

(உ-77)

## அரச மருந்தகங்களில் மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவ சேவை

(தென்மராட்சி)

கைதடி, கொடிகாமம்வரணி ஆகிய இடங்களிலுள்ள அரசினர் மருந்தகங்களில் வாரத்தில் மூன்று தினங்கள்மட்டுமே நோயாளர்கள் பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர்.

இம் மருந்தகங்களில் முழுநேரமாகப் பணியாற்றுவதற்குப் போதிய மருத்துவர்கள் இல்லாமையினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

(உ-77)

## 101 வயது மூதியவரின் இளமையின் இரகசியம் அறிக்கை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

முதியோரைக் கனம் பண்ணுவதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள மூத்த பிரஜைகள் நலன் பேணும் சபையும் முன்னாள் வங்கியாளர் சங்கமும் இணைந்து யாழ். மாவட்டத்தில் உள்ள மூத்தோரைக் கௌரவிக்க முடிவு செய்துள்ளன.

இதன் முதல் நடவடிக்கையாக முதியோர் தினமான எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி.ப. 4.30 மணிக்கு 101 அகவையைப் பூர்த்தி செய்த சின்னத்தம்பி ஆறுமுகம் அவர்களைக் கௌரவிக்கும் விழா யாழ்ப்பாணக் கல்லூரியின் யாழ். கிளையில் இடம்பெறவுள்ளது.

பிரபல சட்டத் தரணியும் சமூக சேவையாளருமான எஸ். கனகரட்ணம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் அரசாங்க வைத்தியர் சங்க யாழ். கிளையின் காரியதரிசி டாக்டர் குமாரவேல் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் டாக்டர் பி பிரைட்டன் ஆகியோர் இணைந்து கௌரவிக்கப்படும் மூத்தபிரஜையின் இளமையின் ரகசியம் என்னும் வைத்திய அறிக்கையை வெளியிடவுள்ளனர். (உ77)

## சிறுவர் தினம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம், சிறுவர் கல்விக்கும் பால் நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் சர்வதேச சிறுவர் தின விழா மூளாய் கூட்டுறவு வைத்திய சாலை மருத்துவக் கல்லூரி கேட்போர் கூடத்தில் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம் பெறவுள்ளது. (உ)

## சங்கே முழங்கு

### நீர்வை வடக்கு பகுதி அபிவிருத்திக்கு வருமா?

நீர்வேலி வடக்குப் பகுதி அபிவிருத்தி வேலைகளுக்குப் புறக்கணிக்கப்பட்டிருப்பது ஏன் என்பது தெரியவில்லை.

நீர்வேலி புன்னாலைக்கட்டுவன் வீதியில் காமாட்சி அம்பாள் கோவிலில் இருந்து நீர்வேலிச் சந்திவரையுள்ள பகுதி நீண்டகாலமாகத் திருத்தப்படாதுள்ளது. கூடுதலான மக்கள் பாவிக்கும் இவ் வீதியின் முக்கியத்துவத்தை உணர்ந்து உரிய பகுதியினர் இனியாவது நடவடிக்கை எடுப்பார்களா?

நீர்வேலி மாசுவன் பகுதியிலிருந்து சந்தி நோக்கி வரும் மோதர் வேணி ஒழுங்கைக்கு மின்சாரம் வழங்க கம்பங்கள் நாட்டப்பட்டு ஒருவருட காலத்துக்கு மேலாகியும் இன்றுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

மேலும் குறித்த வீதியும் நீண்டகாலமாகியும் திருத்த வேலைகள் செய்யப்படாது கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது, மாரிகாலத்தில் வெள்ளம் பாயும் வெள்ள வாய்க்கால் என்பதையாவது கருத்திற் கொண்டு இவற்றை உடன் திருத்தவும், மின்சாரம் வழங்கவும் உரிய பகுதியினர் இனியாகிலும் முயலுவார்களா? என மக்கள் விழிக்கிறார்கள்.

த. சின்னராசா

நீர்வேலி, வடக்கு.

## யாழ்.பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிக்குத் தெரிவானோர் விபரம்

(தும்பளை)

யாழ்.பல்கலைக் கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிக்கு 2002/2003 கல்வி ஆண்டிற்கு 50 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர்கள் வருமாறு;

ஆ. அரவிந்தன், சி. அருள்குமரன், ச. சந்திரமோகன், வீ. சித்திரா, ச. ஞானவேல், ர. ஜெனார்தனன், அ.ஜெயந்தன், இ. கஜேந்திரன், வி. காந்தரூபன், கு. குகதாசன், து. குமரநாதன், ந. மகேஸ்வரன் அ. மதனராஜ், த. மதியழகன். தி.மயூரன், சி. முத்துக்குமார், ந. நகிந்தன், ந. நிறைஞ்சன், த. பகீதரன், செ. பன்னீர்ச்செல்வம், ச. பத்மஜெயன்,

து. பிரபுதாஸ், தி. பிரசாத், இ. ரமணன், இ. ரமணன், ச. ரமணன், சி. ரமணராசா, கா. ரமேஸ், பா.சாந்தரூபன், வே. சர்வேந்திரன், சி. சத்திய சங்கர், இ. சாமினி மோ.சாந்தன் சத்தியகீர்த்தி, ந சிவகுமாரன், சி. சிவானந்தராசா, ச. சிவதர்சினி, சி. சிவதீஸ், க. சியாழினி கு. ஸ்ரீ கிருஷாந்தி, த. சுலுக்சன், ம. தயாமதி, ச. தயாபரன், அ. தேவசுதன், இ. திருச்செல்வம், சி. திபாகர், தி. உமாகாந்தன், செ. விஷிதன், எச். வி. பிரபாகரன், சி. சுஜிந்தா, ம. சசிகலா.

(உ-245)

# அமெரிக்க வங்கியில் கொள்ளை ஊழியர் உட்பட ஐவர் கொலை

## செயற்கைக் கோள் உதவியுடன் கொள்ளையர் கைது

(லண்டன்)

அமெரிக்காவில் வங்கி ஒன்றில் 5பேரைச் சுட்டுக்கொன்று விட்டு பணத்தை கொள்ளையடித்துச் சென்ற கும்பலை அமெரிக்கப் பொலிஸார் செயற்கைக் கோளின் உதவியுடன் கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியான நப்ராகில் வங்கி ஒன்று உள்ளது. இவ்வங்கிக்கு நேற்று முன்தினம் மர்மக்கும்பல் ஒன்று வந்தது. யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் தங்களுடன் மறைத்துக் கொண்டு வந்த துப்பாக்கியை எடுத்து சரமாரியாகச்சுடத் தொடங்கினர்.

இதில் 4வங்கி ஊழியர்களும் வாடிக்கையாளர் ஒருவரும் குண்டு பாய்ந்து உயிரிழந்தனர்.

பின்னர் அங்கிருந்த பணத்தையும் ஒருபையில் திணித்துக் கொண்டு கொள்ளைக் கும்பல் வங்கியிலிருந்து வெளியேறி அங்கு நிறுத்தப்பட்டிருந்த காரைத் திருடிக் கொண்டு தப்பிச சென்றுள்ளது.

மேலும் இக்கொள்ளை பற்றி அறிந்த பொலிஸார் மர்மக்கும்பல் தப்பிச் சென்ற காரைக் கண்டு பிடிக்கும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

நவீன கருவிகள் கொண்டுள்ள அமெரிக்கப் பொலிஸார் செயற்கைக் கோள் மூலம் தேடியபோது காணாமல் போன கார் பல மைகளுக்கு அப்பால் தனியே நிறுத்தப்பட்டிருந்தது எனத் தெரியவந்தது.

இதனையடுத்து அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் சுற்றியுள்ள இடங்களில் சோதனைகளை மேற்கொணடனர். அதில் உணவு விடுதி ஒன்றில் தங்கியிருந்த மர்மக்கும்பலைப் பொலிஸார் கண்டு பிடித்துக் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

### இந்தியப் பத்திரிகையாளர் ஷியானியின்

# கொலைக் குற்றவாளி நீதிமன்றில் சரண்

(புதுடில்லி)

டில்லி பத்திரிகையாளர் ஷிவானி பட்நாகர் கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள காவல்துறை தலைமை ஆய்வாளர் ரவிகாந்தசர்மா அம்பாலா நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

இவரை அடுத்தமாதம் 5ஆம் திகதி நீதிமன்றக் காவலில் வைக்கு மாறு குற்றவியல் நடுவர் நீதிமற்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், 1999ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் திகதி இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழின் பத்திரிகையாளர் ஷிவானி பட்நாகர் டெல்லியில உள்ள அவரது இல்லத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான குற்றவாளி இவர் என்பதும்,

கடந்த இரண்டு மாதங்களாக டில்லி காவல்துறையினரின் பிடியில் சிக்காமல் தலைமறைவாக இருந்தார் என்றும்,

இவருக்கு எதிராக நீதிமன்றத்தில் பிணையில் விடுதலையாக முடியாத கைது உத்தரவு அளிக்கப்பட்டு, ஆகஸ்ட் 3ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்ட தலைமறைவுக் குற்றவாளியாக நீதிமன்றம் அறிவித்ததைத் தொடர்ந்து நேற்றுமாலை 4 மணியளவில் நீதிமன்றில் சரணடைந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சு)

# சாம்பியன் கடலில் கப்பல் கவிழ்ந்தது

## 60 பேர் உயிருடன்மீட்பு

(லண்டன்)

மேற்கு ஆபிரிக்க நாடான சாம்பியன கடற்பகுதியில் நேற்று முன்தினமிரவு கப்பல் ஒன்று கவிழ்ந்ததில் நூற்றுக் கணக்கானோர் கடலில் மூழ்கியிருக்கலாமென்று அறியப்படுகிறது.

செனகல் நாட்டைச் சேர்ந்த இந்தக் கப்பலில் 796 பேர் பயணம் செய்ததாகவும் 60 பேர் மட்டுமே காப்பாற்றப்பட்டனர் என்றும், 550பேர் மட்டுமே பயணம் செய்யக் கூடிய இந்தக்கப்பலில் அளவுக்கதிகமாகப் பயணிகள் ஏற்றப்பட்டதனாலேயே இக் கப்பல் கவிழ்ந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்

இச் செய்தி அறிந்தவுடன் மீட்புப் பணியாளர்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும்,

அவர்களது சாதுரியத்தால் 60போ உயிருடன் காப்பாற்றப்பட்ட அதே வேளை 41 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். கப்பல் கவிழ்ந்துள்ளதால பெருமளவிலான பயணிகள் கப்பலுக்குள் சிக்குண்டிருக்கலாமென்றும் அதிகாரிகள் அஞ்சுகின்றனர். (சு)

# இஸ்ரேலின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து லெபனானில் பெண்கள் பேரணி

(ஜெருசலேம்)

பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளதைக் கண்டித்து லெபனானில் ஆயிரக் கணக்கான பெண்கள் பேரணி நடத்தினர்.

பலஸ்தீனப் பகுதியில் இஸ்ரேலிய இராணுவத்தினர் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்புக்கு எதிராக பலஸ்தீனியர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

பலஸ்தீனியர்களின் கிளர்ச்சித் தொடர்பில் இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்து விட்டதைத் தொடர்ந்து, இதனை நினைவு கூரும் வகையில் லெபனான்தலைநகரில் நேற்று பிரமாண்டமான பேரணி ஒன்று நடைபெற்றது.

ஆல்நதியா மசூதியில் மிகப் பெரியளவில் தொடங்கிய இப்பேரணியில் கிஸ்புல்லா கொரில்லா படையினரும் ஆயிரக்கணக்கான பெண்களும் கலந்து கொண்டனர். பேரணியின் போது இஸ்ரேல் மற்றும் அமெரிகாவுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பேரணிக்குப் பின்னர் நடைபெற்ற கூட்டத்தில், உரையாற்றிய கிஸ்புல்லா தலைவர் சேர்க் ஹுசேக் பலஸ்தீனியர்கள் நாள்தோறும் எதிர்கொண்டு வரும் சவால்களை சமாளிக்க லெபனான் மக்களும், அரசும் ஆதரவு தரவேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)



தென்கொரியா, சீனா இடையே தூதரக உறவு மலர்ந்து 10 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி, தென்கொரிய நாட்டின் சீயோல் நகரில் உள்ள கிம்போ விமான நிலையத்தில் நடந்த சூப்பர் லாந்தர் விழாவில் மனித கோபுரம் அமைத்த சிறுமிகள்.

WORLD NEWS உலக தரிசனம்

# இந்தியா குற்றச்சாட்டு

(புதுடில்லி)

அக்ஷார்தாம் சுவாமி நாராயணன் கோயிலுக்குள் புகுந்து அங்கிருந்த 32பக்தர்களைச் சுட்டுக் கொன்ற பயங்கரவாதிகள் இருவரும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களே எனத் தெளிவாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலை நடத்தியவர்கள் பாகிஸ்தானியர்கள் அல்ல என்றும், குஜராத் கலவரத்தின் எதிர்விளைவாகவே இத்தாக்குதல் இடம் பெற்றுள்ளது என்றும், பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் நேற்றுக் காலை கூறியிருந்தமை, சதியை மறைக்கும் திட்டமிட்ட பொய்ப்பிரசாரம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

### அமெரிக்கத் தாக்குதலின்

# சந்தேகநபரைவிடுவிப்பதுதொடர்பாக புலனாய்வுப் பிரிவு அறிக்கை

(லண்டன்)

அமெரிக்கா மீது கடந்தவருடம் செப்ரம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்குச் சதித்திட்டம் தீட்டிய குற்றச்சாட்டின் பேரில் சிறையில் இருக்கும் ஜக்ரீயர் முஷாவை விடுதலை செய்யப்பட்டால் மீண்டும் ஒரு தாக்குதலை மேற்கொள்வார் என்ற ஆதாரம் இருப்பதாக சமஷ்டி புலனாய்வுப் பிரிவு கூறியுள்ளது.

இந்தச் சந்தேக நபரை விசாரணை செய்து வரும் நீதமன்றம் நேற்று வெளியிட்ட பகிரங்க அறிக்கை ஒன்றின் மூலம் இது தெரியவந்துள்ளதாகப் புலனாய்வுப் பிரிவு மேலும் கூறியுள்ளது.

விமானம் ஒன்றைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அதனைக்கொண்டு உலக வர்த்தக நிலையம் மீது மற்றொரு தாக்குதல் நடத்துவதற்கு இவர் திட்டமிட்டிருந்ததாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருட விமானத் தாக்குதல்கள் நடைபெற்ற சமயத்தில் அவர் மினசோட்டா சிறையில் இருந்த போதிலும் அவரே அந்தத் தாக்குதலைத் திட்டமிட்டுள்ளார் என்றும்,

இவர் ஒருவர் மீதே சதித்திட்டம் தீட்டியதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது எனவும் நம்பப்படுகிறது. (சு)

# இஸ்ரேல் படையை வாபஸ் பெற ஐ.நா. பாதுகாப்பு பேரவை வேண்டுகோள்

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்தில் முற்றுகையிட்டுள்ள படையினரை வாபஸ் பெறுமாறு இஸ்ரேலுக்கு ஜக்கிய நாடுகள் விடுத்த வேண்டு கோளை உடனடியாக நிறைவேற்றுமாறு சபையின் பாதுகாப்புப் பேரவை வினயமாகக் கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை ஏற்கனவே விடுத்த இந்தக் கோரிக்கையை நிறைவேற்றவிடாது அமெரிக்கா தடுத்து நிறுததியதையடுத்தே ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இதே வேளை இஸ்ரேலுக்கான ஐக்கிய நாடுகள் தூது வரை அழைத்து இந்த கோரிக்கையை நிறைவேற்றுமாறு கோர வேண்டுமென்று சிரியத்தூதுவா மிக்காயில் பேட் ஐக்கிய நாடுகள் சபையிடம் தெரிவித்துள்ளார். (சு)

# குஜராத படுகொலையுடன் தொடர்புடைய பயங்கரவாதிகளின் கார் ஓட்டுநர் கைது

## விசாரணைகளின் மூலம் அறிக்கை

(புதுடில்லி)

குஜ்ராத் மாநிலம் காந்திநகர் அக்ஷார்தாம் சுவாமிநாராயணன் கோயிலில் புகுந்து தாக்குதல் நடத்திய 34பேரை சுட்டுக் கொன்ற பயங்கரவாதிகளை அவ்விடத்திற்கு ஏற்றி வந்த கார் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுவாமிநாராயணன் கோயிலுக்கு வெளியே ஒரு வெள்ளை அம்பாசிடர் கார் வந்து நின்றதென்றும், அதிலிருந்து இறங்கிய இருவர் தங்களுடைய உடைகளை மாற்றிக் கொண்டு பிறகு திடீரென தாங்கள் மறைத்துக கொண்டு வந்த துப்பாக்கிளை வெளியே எடுத்து கோயிலுக்குள் இருந்த பக்தர்களைச் சரமாரியாக சுட்டுக்கொண்டு உள்ளே புகுந்தனர் என்று நேரில் கண்ட சாட்சிகள் கூறின.

இதனை அடிப்படையாகக் கொண்டு குஜராத் மாநில காவல்துறையினர் மேற்கொண்ட தீவிர புலனாய்வில் பயங்கரவாதிகளை இறக்கிவிட்ட அந்த அம்பாசிடர் காரும், அதன் ஓட்டுநரும் கைது செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை தலைமை இயக்குநர் கே.சக்கரவர்த்தி செய்தியாளர்களிடம் கூறினார்.

அகமதாபாத்தில் நேற்றுமுன்தினம் காலை செய்தியாளர்களிடம் பேசிய சக்கரவர்த்தி, கைது செய்யப்பட்டுள்ள கார் ஓட்டுநர் சுட்டுக்கொல்லப்பட்ட இரண்டு பயங்கரவாதிகளையும் அடையாளம் காட்டியதாகவும், அவர்கள இருவரையும் அகமதாபாத் ரயில் நிலையத்தில் இருந்து காந்தி நகருக்கு தனது காரில் ஏற்றி வந்ததாகவும் ஒப்புக் கொண்டார் எனத் தெரிவித்தார்.

இதற்கிடையே, சுட்டுக்கொல்லப்பட்ட பயங்கரவாதிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கடிதம் உருதுமொழியில் எழுதப்பட்டிருந்ததால் அவர்கள் உள்ளூரைச் சேர்ந்தவர்கள்தான் என்று கூறப்படுவதை குஜராத் முதல்வர் நரேந்திர மோடி திட்டவட்டமாக மறுத்திருந்தார்.

மேலும் யு.என்.ஐ செய்தியாளர்களிப் பேசிய குஜராத் மாநில உள்துறை அமைச்சர் கோர்தான் ஜாடா·.பியா, பயங்கரவாதிகளை அக்ஷாதர்தாம் கோயிலுக்குக் கொண்டு வந்த டாக்ஸி ஒட்டுநரையும் மேலும் ஒருவரையும் காவல்துறையினர் கைது செய்துள்ளதாகவும் அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிதுள்ளார். (சு)



பாகிஸ்தானின் தென்மேற்கு நகரான குவெட்டாவில், சிபி அருகே ரயில்வே மேம்மாலத்தின் மீது பயணிகள் ரயில் ஒன்று தடம் பரண்டு விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் 16பேர் உயிரிழந்தனர். 70க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். மேம்பாலம் பழுதடைந்திருந்ததால் இந்த விபத்து ஏற்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இன்று ஒரு தகவல்

## யானையும் பானையும்

ஒரு அமைச்சர் அரண்மனைக்கு பிந்திவந்திருக்கிறார். ஏன் தாமதம் என்று கேட்டிருக்கிறார் ராஜா. 'அரசே! நான் சீக்கிரமாகவே புறப்பட்டு விட்டேன்... அந்தச் சமயம் பார்த்து. என் பையன் அடம் பண்ண ஆரம்பித்து விட்டான் நானும் கூட வருவேன் என்று பிடிவாதம் பிடிக்கின்றான்... அவனை ஒருவழியாகக் சமாதானம் பண்ணிச் சரிப்பண்ணி விட்டு வருவதற்குள்ளே போதும் போதும் என்று ஆய்விட்டது. அது தான் கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது! 'என்றார் அமைச்சர்.

அரசர் சிரித்தார் 'என்ன அமைச்சரே! அரண்மனையிலே எத்தனையோ கடுமையான பிரச்சினைகளுக் கெல்லாம் மிகவும் சாமர்த்தியமாகப் பதில் சொல்லிச் சமாளிக்கிற உங்களுக்கா ஒரு குழந்தையைச் சமாதானப் படுத்துவது பெரிய விஷயமாகப் போயிற்று? என்றார்.

''மன்னா! ஒரு பெரிய யானையை அடக்குவதை விட. ஒரு பெரிய சேனையை போரிலே ஜெயிப்பதை விட, ஒரு குழந்தையைச்சமாதானப் படுத்துவது கஷ்டமான செயல்...' என்றார் இவர்.

''அப்படியா சொல்கிறீர்கள்?'' என்று சந்தேகமாகக் கேட்டார் ராஜா. வேண்டுமென்றால் நான் அதை நிரூபித்துக் காட்டுகிறேன். அதற்கு நீங்கள் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டும்'' என்றார. என்ன செய்ய வேண்டும்? என்றார்.

''கொஞ்ச நேரம் நீங்கள் எனக்கு அப்பாவாக நடிக்க வேண்டும். நான் உங்கள் குழந்தையாக நடிக்கிறேன். நான் அடம் பண்ணுவேன். நீங்கள் என்னைச் சமாதானப் படுத்த வேண்டும்'' என்றார் அமைச்சர் ''சரி'' என்று ஒத்துக் கொண்டார் ராஜா.

இப்போது ராஜா தான் அப்பா! அமைச்சர் தான் குழந்தை! அமைச்சர் தரையில் உட்கார்ந்தார். கையைக் காலை உதைத்துக் கொண்டு கத்த ஆரம்பித்தார் அதாவது குழந்தை அடம்பண்ண ஆரம்பித்து விட்டது. அப்பா அது தான் ராஜா கிட்ட வந்தார், ஏன் அழுகிறாய், உனக்கு என்ன வேண்டும்? என்றார். ''எனக்கு ஒரு யானை வேண்டும் என்று அழுதது அந்தக் குழந்தை'' கொண்டு வரச் சொல்லிக் கொடுத்தார். குழந்தை மறுபடியும் உதைக்க ஆரம்பித்தது. ''நீ கேட்டதைக் கொடுத்து விட்டேன். மறுபடியும் ஏன் கத்துகிறாய்? என்றார். ''இந்தப் பானைக்குள்ளே அந்த யானை போக வேண்டும்'' என்று கத்துகிறது குழந்தை.

ராஜா பார்த்தார். ''சரி இந்தப் பானையில் அந்த யானை போக வேண்டும்! அவ்வளவுதானே!'' என்றார். அந்தப் பானையைத் தரையில் வைத்தார். அதில் அந்த யானையைப் போகச் சொன்னார். யானை அதிலே காலை வைத்தது. பானை உடைந்து போயிற்று. குழந்தை மறுபடியும் கத்தஆரம்பித்து விட்டது. ''எனக்குப் பானை வேண்டும் என்றது. ''சரி. இன்னொரு பானை கொண்டு வந்து கொடுங்கள்'' என்றார் கொண்டு வந்து கொடுத்தார்கள். எனக்கு இந்தப் பானை வேண்டாம் அந்தப் பானை தான் வேண்டும்'' என்று கத்துகிறது.

அதுதான் உடைந்து போயிற்றே'' என்றார். ''உடைந்தால் என்ன?'' அதை மறுபடியும் ஒன்று சேர்த்துப் பழையபடி பானையாக்கிக் கொடு'' என்று பிடிவாதம் பண்ணியது குழந்தை. ராஜா பார்த்தார். இதற்கு மேலே நம்மால் தாக்குப் பிடிக்க முடியாது, என்று முடிவுக்கு வந்து விட்டார். ''போதும் அமைச்சரே! புரிந்து கொண்டேன், எழுந்திருங்கள்'' குழந்தையைச் சமாதானப் படுத்துவது கஷ்டம் தான்'' என்றார். அமைச்சர் அதன் பின்புதான் கையைக் காலை உதறிக் கொண்டு எழுந்து விட்டார். குழந்தைகளின் பிடிவாதம் இருக்கிறது பாருங்கள். அது ஒரு தனிரகம் தான். பள்ளிக்கூடத்தில் ஒரு பையன் ''தரையில் கிடந்து வாள் வாள்என்று கத்திக் கொண்டு கிடந்தான். அந்த நேரம் பார்த்து அந்தப் பையனுடைய அப்பா அங்கு வந்தார். அழைத்துக் கொண்டு போவதற்கு!

''ஏன்பையன் கத்துகிறான்? என்று கேட்டார். பையன்களுக்குள்ளே ஏதோ சண்டை அதிலே ஒருபக்கத்துக்காதைக் கடித்து விட்டான். அதுதான் கத்துகிறான்'' என்றார் ஆசிரியர். ''அய்யய்யோ, அப்படியென்றால் என் பையனை உடனே ஆஸ்பத்திரிக்குக் கூட்

# இந்து மாநாட்டில் மாணவர்களும் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கலாம்

(கொழும்பு)

இந்துசமய அலுவல்கள் அமைச்சு 2003 ஆம் ஆண்டு மே மாதம்நடத்தவுள்ள இந்து மாநாட்டில் மாணவர்களுக்கான கருத்தரங்கொன்றையும்நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது

அக் கருத்தரங்கில் பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள். உயர்தொழில் நுட்பக் கல்லூரிகள்முதலான உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களும் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தர மாணவர்களும் கலந்து கொள்ளலாம். கட்டுரை சமர்ப்பிக்க விரும்பும் மாணவர்கள் உரிய விண்ணப்பப்படிவங்களை நிரப்பி அனுப்புதல் மூலம் தம்மைப் பதிவுசெய்துகொள்ளல் வேண்டும் எனவும்,

கட்டுரைகள் இந்துசமயம் இந்துகலாசாரம்என்பனபற்றி ஆராய்ச்சி பூர்வமாய் அமைதல் வேண்டும் எனவும் தகுதியான கட்டுரைகளை மாநாட்டுக்காலத்தில் உரிய மண்டபத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பார்வையாளர்களாகக் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களை பெறுவதற்கு பேராசிரியர் சி. பத்மநாதன், மாநாட்டுச் செயலாளர் மாநாட்டுச் செயலகம், இந்து சமய விவகார அலுவலகள் அமைச்சு, 248, 2\1, காலி வீதி கொழும்பு- 4 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

## கொழும்பு மாநாட்டில் யாழ்.முதல்வர்

(யாழ்ப்பாணம்)

உலகக் குடியிருப்பு தினத்தை முன்னிட்டு எதிர் வரும் 7 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறும் 'நகரத்தில் இருந்து நகரத்திற்கு ஒத்துழைப்பு' என்ற கருப்பொருளிலான மாநாட்டில் யாழ். மாநகர முதல்வர் எஸ். கந்தையன் கலந்துகொள்ளவுள்ளார். (உ-6)

## விவசாயக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை யாழ்.மாவட்டச்செயலகக் கேட்போர் கூடத்தில் மு ப.10 மணிக்கு அரசாங்க அதிபர் தலைமையில் இடம் பெறவுள்ளது.

விவசாயத் திணைக்கள அதிகாரிகள் பலரும்கலந்து கொள்ளும் இக் கூட்டத்தில் எதிர்கால விவசாய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது. (உ-6)

## கலைப்பீட மாணவர்களை மீளப்பதிதல்

(தும்பளை)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களை மீளப்பதிதல் இம்மாதம் 30 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இந்தவகையில், இராமநாதன் நுண்கலைப் பீட மாணவர்களை இம் மாதம் 30 ஆம் திகதியும் கலைப் பீடம 3 ஆம் வருட,4 ஆம் வருட,2 ஆம் வருட மாணவர்கள் முறையே ஒக்ரோபர் 4,10,14 ஆம் திகதிகளிலும் மீளப்பதியப்படவுள்ளனர். (உ-245)

## பல்பாடநூல்

## கங்காணி மலையில் திடீரென தீ பரவியது

(கண்டி)

கண்டி நகருக்கு அண்மையில் அமைந்துள்ள கங்காணி மலையில் ஒருபகுதியில்நேற்று முன்தினம் மாலை திடீரென தீபரவியுள்ளது.

இதனை அணைக்கும் முயற்சியில் கண்டிப் பொலிஸாரும் தீ அணைப்பு பிரிவினரும் பிரதேச வாசிகளின் உதவியுடன் ஈடுபட்டுள்ளனர்.

தீப்பற்றி எரியும் மலைப் பகுதியின் மலைக்குன்று ஒன்றில் பல்வேறு தொலைத் தொடர்பு நிறுவனங்களின் தொலைத் தொடர்பு கோபுரங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## அம்பாறை மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கோரிக்கை

(அம்பாறை)

வன் செயல்கள் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட மீனவர்களுக்கு இதுவரை நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை.

தற்போது அமைதிச் சூழல் நிலவி வருவதால் உரிய இழப்பீடுகளை அவர்களுக்கு வழங்கி மீன்பிடித் தொழிலை மீண்டும் நடாத்த ஆவன செய்யுமாறு பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திர நேரு கோரிக்கை விடுத்துள்ளார்.

கடல் தொழில் நீரியல் வள அமைச்சர் மகிந்த விஜயசேகர தலைமையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில நடந்த கூட்டத்தில் வைத்து அம்பாறை மாவட்ட மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை குறித்து நேரில் உரையாடிய வேளை இக் கோரிகை முன்வைக்கப்பட்டது.

இதே வேளை, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பற்றியும் இங்கு ஆராயப்பட்டது. (உ-10)

## சமாதான முயற்சிகளுக்கு எதிராக கூட்டங்கள் ஜே.வி.பி.திட்டம்

(கொழும்பு)

செய்துள்ளன.

படுத்த வேண்டும்'' என்றார் அமைச்சர் ''சரி'' என்று ஒத்துக் கொண்டார் ராஜா.

இப்போது ராஜா தான் அப்பா! அமைச்சர் தான் குழந்தை! அமைச்சர் தரையில் உட்கார்ந்தார். கையைக் காலை உதைத்துக் கொண்டு கத்த ஆரம்பித்தார் அதாவது குழந்தை அடம்பண்ண ஆரம்பித்து விட்டது. அப்பா அது தான் ராஜா கிட்ட வந்தார், ஏன் அழுகிறாய், உனக்கு என்ன வேண்டும்? என்றார். ''எனக்கு ஒரு யானை வேண்டும் என்று அழுதது அந்தக் குழந்தை'' இதுதானா பிரமாதம் என்று ஒரு பொம்மை யானையைக் கொண்டு வந்து கொடுக்கச் சொன்னார். கொடுத்தார்கள். குழந்தை மறுபடியும் கத்துகிறது. ''எனக்கு இது வேண்டாம் நிஜயானை வேண்டும்'' என்றது. ராஜா நினைத்தால் முடியாதா? உடனே ஒரு பெரிய யானையைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். ''அப்பா; இப்போது எனக்கு ஒரு பானை வேண்டும்!'' என்றது குழந்தை! ராஜா பார்த்தார். . . ஒரு பானை

ஒரு தனிரகம் தான். பள்ளிக் கூடத்தில் ஒரு பையன் ''தரையில் கிடந்து வாள் வாள்என்று கத்திக் கொண்டு கிடந்தான். அந்த நேரம் பார்த்து அந்தப் பையனுடைய அப்பா அங்கு வந்தார். அழைத்துக் கொண்டு போவதற்கு!

''ஏன்பையன் கத்துகிறான்? என்று கேட்டார். பையன்களுக்குள்ளே ஏதோ சண்டை அதிலே ஒருபக்கத்துக்காதைக் கடித்து விட்டான். அதுதான் கத்துகிறான்'' என்றார் ஆசிரியர். ''அய்யய்யோ, அப்படியென்றால் என் பையனை உடனே ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போக வேண்டுமே'' என்று பதறினார் அப்பா. ''பதறாதீர்கள் சார்! கடிபட்டவன் ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டான். இவன் கடித்தவன் . . . கத்துகிறான்' என்றார் ஆசிரியர். ''ஏன் என்று கேட்டார் அப்பா! இன்னொரு பக்கத்துக் காதும் வேணும் கடிப்பதற்கு!

என்று அடம்பண்ணுகிறான் சார்!'' என்றார் ஆசிரியர் தன்னுடைய காதைத் தடவிப் பார்த்துக் கொண்டே!

தென்கச்சிகோ:சுவாமிநாதன்

# அரசியல் அமைப்புச் சபை அர்த்தம் இழந்து வருகிறது

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முக்கிய பதவிகளுக்கு தான் விரும்பாதவர்களை நியமிப்பதைத் தவிர்த்து வருகிறார்.

இதன் காரணமாக அரசியலமைப்புச் சபை அதன் அர்த்தத்தை இழந்து வருகிறது என அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் இந்தப் பாக்கின் காரணமாக கடுமையான அரசியல் நெருக்கடிகள் உருவாகும் அபாயம் உள்ளதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்,

ஜனாதிபதியின் இந்த வகையிலான நடவடிக்கைகளினால் அரசாங்கத்தின் நிர்வாகச் செயற்பாடுகளிற்கு பாரிய முட்டுக்கட்டையை ஏற்படுத்தியுள்ளதுடன், 17 வது அரசியலமைப்பு மாற்றமும் அர்த்தமிழந்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (உ)

கலைப்பீட மாணவர்களை மீளப்பதிதல் இம்மாதம் 30 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இந்தவகையில், இராமநாதன் நுண்கலைப் பீட மாணவர்களை இம் மாதம் 30 ஆம் திகதியும் கலைப் பீடம 3 ஆம் வருட,4 ஆம் வருட,2 ஆம் வருட மாணவர்கள் முறையே ஒக்ரோபர் 4,10,14 ஆம் திகதிகளிலும் மீளப்பதியப்படவுள்ளனர்.

(உ-245)

# பல்பாட நூல் தேர்வுக் கொள்கை 2004இல் அறிமுகம்

(கொழும்பு)

உலக வங்கியின் அனுசரணையுடன் கல்வி மனிதவள அமைச்சு எதிர்வரும் 2004 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் உள்ள அரசாங்க பாடசாலைகளில் தரம் 6 இலிருந்து பல் பாட நூல் தேர்வுக்கொள்கையினை அறிமுகம் செய்யவுள்ளது.

இக்கொள்கை மாணவ சமூகம் நவீன சவால்களுக்குமுகங் கொடுக்கக்கூடிய வகையில் அறிமுகம் செய்யப்படவுள்ளது. (உ-3)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கப் பணிமனைத் திறப்பு விழா இன்று மு.ப.10.00 மணிக்கு சங்கத்தின் தலைவர் செ.விக்கினேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது;

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கனகசபாபதி கலந்து கொள்ளவுள்ளார்.

(உ)

தற்போது அமைதிச் சூழல் நிலவி வருவதால் உரிய இழப்பீடுகளை அவர்களுக்கு வழங்கி மீன்பிடித் தொழிலை மீண்டும் நடாத்த ஆவன செய்யுமாறு பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு கோரிக்கை விடுத்துள்ளார்.

கடல் தொழில் நீரியல் வளச்சனை குறித்து நேரில் உரையாடிய வேளை இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதே வேளை, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பற்றியும் இங்கு ஆராயப்பட்டது.

(உ-10)

# சமாதான முயற்சிகளுக்கு எதிராக கூட்டங்கள் ஜே.வி.பி.திட்டம்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தத்திட்டமிட்டுள்ளது. 'சமாதரனமும் ஈழமும்' என்ற தலைப்பில் நாடு தழுவிய ரீதியில் சமாதான எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி வட்டாரங்கள் இதனை உறுதி செய்துள்ளன.

பேச்சுவார்த்தை மூலம் நாட்டை பிரித்து புலிகளிடம் கொடுக்க அரசாங்கம்முயன்று வருகிறது. இதற்காகவே விடுதலை புலிகள்பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர் என்பதை நாட்டு மக்களுக்கு விளக்கி கூறவே இந்த கூட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (உ-7)

# கண்ணிவெடிகளை அகற்ற 5 வருடங்கள் போதும்

## சு. ப. தமிழ்ச் செல்வன் தெரிவிப்பு

(வவுனியா)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு 40 தொடக்கம் 50 வருடங்கள் செல்லுமென சர்வதேச நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ள போதிலும்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினால் இக் கண்ணிவெடிகளை 4 அல்லது 5 வருடங்களில் அகற்றமுடியுமென புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.

உரிய நிதியுதவிகள் கிடைக்கும் பட்சத்தில் மேற்படி பணியை தம்மால் செவ்வனே நிறைவேற்ற முடியும்எனவும்,

ஓயாத அலைகள் தொடர் இராணுவ நடவடிக்கை மூலம் கிளிநொச்சியைக்கைப்பற்றிய போது கண்ணிவெடிகள் பெருமளவில்விதைக்கப் பட்ட பிரதேசமாக இருந்தது.

இருப்பினும் மிகவும் குறுகிய காலத்தில் எமது கண்ணிவெடி அகற்றும் பிரிவு கிளிநொச்சி நகரத்தை பயன்படுத்தக்கூடிய இடமாக மாற்றியது என்பதையும்தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ)

## முதியோர் தினம்

(யாழ்ப்பாணம்)

கைதடி அரசினர் முதியோர் இல்லத்தில் சர்வதேச முதியோர் தினத்தினை எதிர்வரும் 7ஆம் திகதி கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட அரச அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

பாடசாலைகள் மற்றும் பொது அமைப்புகளின் கலை நிகழ்வுகளும் அன்றையதினம் இடம்பெறவுள்ளதாக இல்லத்தின் அத்தியட்சகர் கே. வி. சிவனேசன் தெரிவித்துள்ளார். (உ-77)

## மாணவர் விபரம் திரட்டல்

(மந்திகை)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளிலிருந்து தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் விபரங்களை உடன் அனுப்பிவைக்குமாறு வலயக் கல்வி பணிப்பாளர் வி. ரி. செல்வரட்ணம் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட பாடசாலைகளிலிருந்து பரீட்சைக்குதோற்றியவர்களின் தொகை, சித்தியடைந்தவர் தொகை, உதவு தொகைகளை பெறத் தகுதி பெற்றவர்களின் எண்ணிக்கை என்பவற்றை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-23)

## இலவசமாக தென்னம் பிள்ளைகள்

(தென்மராட்சி)

சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையப்பகுதிக்குள் இருக்கும் ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 5வீதம் 5 ஆயிரம் தென்னம்பிள்ளைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட கமநல சேவைகள் நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (உ-77)

## தலைவர் பிரபாகரன் தியாகி திலீபனுக்கு தீபம் ஏற்றி அஞ்சலி

(கிளிநொச்சி)

தியாகி லெப் கேணல் திலீபனின் 15 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகளில் தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் வன்னியில் பிரதேசதளம் ஒன்றில் கலந்து கொண்டு தியாகி திலீபனின் திருஉருவப் படத்திற்கு தீபம் ஏற்றி அஞ்சலிசெலுத்தினார்.

தியாகி திலீபன் உயிர்த் தியாகம் செய்த நேரமான காலை, 10 48 மணிக்கு சகல ஆலயங்களிலும் பொது இடங்களிலும் மணி ஓசை எழுப்பப்பட்டது. (ம)

## 25,157 குடும்பங்கள் யாழ். திரும்பின

(தென்மராட்சி)

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழவிடுதலைப்புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தானதன் பின்னர் இன்றுவரை 25 ஆயிரத்து 157 குடும்பங்களைச் சேர்ந்த 94 ஆயிரத்து 612 பேர் ஏ-9பாதையூடாக யாழ். குடாநாட்டுக்குள் வருகை தந்துள்ளதாக யாழ். மாவட்டச் செயலகம் மூலம் தெரியவந்துள்ளது.

இக்குடும்பங்களில்பல தங்குமிடம், குடிநீர், மற்றும் தொழிலில்லாப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். (உ-77)

# கண்ணிவெடி அபாயம் நீங்காமையால்

# புனரமைப்புத் திட்டம் இறுதிநேரத்தில் ரத்து

(தென்மராட்சி)

தென்மராட்சிபிரதேசத்தில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் சுமார் 8 லட்சம் ரூபா செலவில் அமுல் செய்வதற்கு அங்கீகாரம் அளிக்கப் பட்ட இரு வேலைத்திட்டங்கள் இறுதி நேரத்தில் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட பக்ஸ் அறிவித்தல் மூலம் ரத்தாகியுள்ளன.

உலக உணவுத்திட்டத்தின் கீழ்மேற்கொள்ளப்படவிருந்த மட்டுவில் முசிறி வாய்க்கால், கைதடி மேற்குஉவர் அணைத் திட்டம் ஆகிய இரு வேலைத் திட்டங்களுமே ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

தென்மராட்சிப் பிரதேசம் மிதி வெடியினால் சூழப் பட்டிருப்பதாலேயே இவ்விரு திட்டங்களையும் அமுல் செய்வதற்கு உலக உணவுத் திட்டம் கடைசி நேரத்தில் தயக்கம் காட்டியுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

தென்மராட்சி பிரதேசத்தில் பணிசெய்வதற்கு சர்வதேச நிறுவனங்கள் ஆர்வம் கொண்டுள்ள போதிலும் கூட, குறித்த பிரதேசத்தில் மிதிவெடிகள் செயலிழக்கப் பட்டு, மிதிவெடிகள் அற்ற பிரதேசம் என உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் வழங்கப் பட்டாலேயே தாம் அங்கு பணிசெய்ய முடியும் என சர்வதேச அமைப்புகள் தெரிவித்து வருகின்றன.

ஆயினும், இத்தகைய சான்றிதழ்களை வழங்கக் கூடிய அதிகாரம் உள்ள நிறுவனம் எது என்று இனங்காண முடியாத நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். (உ-77)

## கலை இலக்கியவாதிகள்குழு மாத்தளைக்கு விஜயம்

(வவுனியா)

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த 70 கலை இலக்கிய வாதிகளை கொண்ட குழுவொன்று வவுனியா மாவட்ட அரச அதிபர் எஸ். கணேஸ் தலைமையில் நேற்று மாத்தளை மாவட்டத்துக்கு சமாதானப் பயணம் செய்துள்ளது.

இவர்கள் அனைவருக்கும் தம்புள்ளவில்வைத்து பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார, மாத்தளை மாவட்ட அரசாங்க அதிபர் தம்மிக ஸ்ரீவன்ச ஆகியோர் தலைமையிலான கலை இலக்கிய வாதிகளால் வரவேற்பளிக்கப்பட்டது.

மாத்தளை ரெஜிமகா விகாரை, மாத்தளை முத்துமாரி அம்மன் தேவஸ்தானங்களுக்கு சென்று இவர்கள் வழிபாடாற்றவுள்ளனர். (உ-8)

## அம்பாறை மக்களைமீள குடியமர்த்தக் கோரிக்கை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து சென்ற மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆர். சந்திரநேரு கோரிக்கைவிடுத்துள்ளார்.

கப்பல்துறை கிழக்கு அபிவிருத்தி, துறைமுக அபிவிருத்தி, முஸ்லிம்விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீமிடமும் தொண்டர் நிறுவனங்களிடமுமே பாராளுமன்ற உறுப்பினர் இவ் வேண்டுகோளைவிடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள கஞ்சிகுடிச்சாறு கிராமத்தைசேர்ந்த 315 குடும்பங்களும் காஞ்சிரங்குடா கிராமத்தை சேர்ந்த 30 குடும்பங்களும் தங்கவேலாயுதம் கிராமத்தைசேர்ந்த 151 குடும்பங்களும் தாண்டியடியை சேர்ந்த 160 குடும்பங்களுமே மீளக் குடியமர்த்தப்பட்ட வேண்டியவர்களாக உள்ளனர்.

இக்கிராமங்களுக்கு உள்ளக கட்டமைப்பு வசதிகளை மாத்திரம் வழங்குவதற்கு 12 மில்லியன் ரூபா தொடக்கம் 25 மில்லியன் ரூபா தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே இதற்குரிய நிதியினையும் வழங்குமாறும்இவ் வேண்டுகோளில் குறிப்பிடப் பட்டுள்ளது. (8)

## பலாத்காரமாக பச்சை மரம் தறிப்பு

வரணிப் பகுதியில் ஆட்கள் இருக்கும் வீட்டுவளவுகளிலும் உள்ள வேம்பு - பூவரசு போன்ற மரங்களை வேறு பகுதியில் இருந்து வரும் கோஷ்டி ஒன்று பலாத்காரமாக தறித்துக்கொண்டு செல்வதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இக்கோஷ்டியின் அடாவடித்தனத்தைத் தடுத்து நிறுத்த இப்பகுதி கிராம சேவையாளர்கள் முயன்ற போதிலும், அது சாத்தியப்படவில்லை எனத் தெரியவருகின்றது (உ-77)

### அரச தனியார் மயமாக்கலை எதிர்த்து

## மகிந்த தலைமையில் புதிய அமைப்பு உருவாக்கம்

(கொழும்பு)

எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவினால் தேசிய வளங்கள் மற்றும் மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பு என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மேற் கொண்டுள்ள தனியார் மயமாக்கலை எதிர்ப்பதும் அதனால் பாதிக்கப்படவுள்ள ஊழியர்களின் உரிமைகளை பேணுவதுமே இவ்வமைப்பின் நோக்கம்என எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்செயற்பாட்டாளராகவும், தலைவராகவும் எதிர்க்கட்சித் தலைவர் நியமிக்கப் பட்டுள்ளதாக அவ் வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

### மதத்தலைவர்களின் ஆலோசனைப்படி

## சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்

(கொழும்பு)

சர்வமதத் தலைவர்களின் ஆலோசனைகளை கவனத்தில் கொண்டு. பேச்சுவார்த்தைகள் முன்னெடுத்துச் செல்லப்படும் என்று அரசியலமைப்பு விவகார, வியாபார அபிவிருத்தி கைத் தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அமைச்சர், தாய்லாந்தில் அடுத்தமாதம் 30 ஆம் திகதி இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் எனவும், ஒரே நாடு ஒரே அரசு என்ற கோட்பாட்டுடன், நாட்டில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எடுத்துவரும் முயற்சிகளுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பும், ஆசீர்வாதமும் கிடைப்பது அவசியம் எனவும் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

### சாவ. ஆஸ்பத்திரியில்

## நீர்த் தட்டுப்பாடு

(தென்மராட்சி)

சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்தியசாலையின் செயற்பாடுகளுக்கு முழுமையான நீர் வசதியின்மை பெரும் பின்னடைவாக இருந்து வருவதாக வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர்எஸ் அம்பிகைபாகன் தென்மராட்சி பிரதேச செயலரிடம் புகார் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இங்கு பிரசவ விடுதியையும், சமையல் கூடத்தினையும் ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்வதற்கு வைத்திய சாலையின் பௌதிக வளங்கள் போதாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-77)

## விசாரணைக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுத்தீவுக் கடற்பரப்பில் வைத்துதொழிலுக்குச்சென்ற மீனவர்களைத் தாக்கிய சம்பவம் தொடர்பான விசாரணைக்காக எதிர்வரும் ஒக்டோபர் 8 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு கடற்படையினர் அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலக அதிகாரி றுவான் சந்திரசேகர இவ் விசாரணையை நடத்தவுள்ளார். (உ-6)

# தென்மராட்சிவிவசாயிகள், மீனவர்கள்

# தொழில்செய்யமுடியாததுர்ப்பாக்கியம்

### தென்மராட்சி பிரதேச செயலர் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலகப் பகுதியிலுள்ள கடற்றொழிலாளர்கள், விவசாயிகள் இன்னமும் தமது தொழில்களைச் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருந்து வருகின்றனர். இதன் காரணமாக இத்தகைய குடும்பங்கள் தமது ஜீவனோபாயத்திற்கு பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளன.

தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன், நேற்று முன் தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடாத்தப்பட்ட தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

தென்மராட்சி பிரதேசத்தில் இருக்கின்ற விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் தமது தொழில்களைச் சுதந்திரமாகச் செய்ய அனுமதிக்கப் படுவர் என தென்மராட்சி பிரதேசத்துக்கு கடந்த இரு மாதங்களில் வருகை தந்திருந்த உயர் மட்ட அதிகாரிகளால் உறுதியளிக்கப்பட்டிருந்த போதிலும் கூட, யதார்த்த நிலையில் எத்தகைய முன்னேற்றகரமான மாற்றமும் ஏற்படவில்லை.

இதனால் மக்களின் சேவகர்களாக இருந்து வருகின்ற அதிகாரிகள் பல நடைமுறைக் கஷ்டங்களை எதிர் கொள்வதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உதவ முடியாத நிலையுமே காணப்படுகின்றது.

இப் பிரதேசத்தில் இருக்கின்றகடற்றொழிலாளர்கள், விவசாயிகள் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகளை நான் எனது உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிறைவேற்ற முயற்சிப்பேன் எனக் குறிப்பிட்டார் (உ-77)

## பளை தபாலகம் இயங்குகிறது

(செம்பியன்பற்று)

இது வரைகாலமும்கரவெட்டிப் பகுதியில் இயங்கி வந்த பளை பிரதம தபாலகம் சென்றவாரம் முதல் பளைப் பகுதியில் இயங்கத் தொடங்கியுள்ளது.

முள்ளியான், ஆழியவளை, தாழையடி, செம்பியன்பற்று உபதபாலகங்கள் அடுத்தமாதம் முதல்வாரமளவில் உரிய இடத்தில் ஆரம்பிக்கப்படும் எனத்தெரிவிக் கப்பட்டுள்ளது (உ-42)

# "சிறுவரை இல்லங்களுக்குக் கொண்டு வருதல்" சமாதானச் சூழலில் அனைத்துலக மாநாடு

**சிறுவர் பாதுகாப்பு UK நோர்வே போன்ற இரு அரச சார்பற்ற நிறுவனங்களும் அடுத்த வருடம் தொடக்கம் சிறுவர் பாதுகாப்பு என்ற பெயரில் ஒன்றிணைந்து இயங்கப்போகின்றன. அந்த வகையில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனங்கள் இரண்டும் ஒன்றிணைந்து சிறுவர்களுக்கான சர்வதேச மாநாடு ஒன்றினை "சிறுவரை இல்லங்களுக்கு கொண்டு வருதல" என்ற பெயரில் தலை நகர் கொழும்பில் "றான்ஸ் ஏசியா ஹோட்டலில" ஒக்டோபர் 1ம், 2ம், 3ம் திகதிகளில் நடாத்துவதாக உள்ளது. அந்நிகழ்வினை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

### அறிமுகம்

நெருக்கடியான காலப்பகுதிகளில் ஏற்பட்ட அசௌகரியமான, அபிவிருத்திக்கு உட்படுத்தப்படாத, முரண்பாட்டுச் சிக்கலான, சூழ்நிலைகளிலிருந்த சிறுவரை எவ்வாறு விடுவித்து; அவர்களினை நாளாந்த வாழ்க்கை வட்டத்திற்குள் எங்ஙனம் கொண்டு வருதல் என்பது தொடர்பாக பலதரப்பட்டவர்களது அல்லது அமைப்புக்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், அவற்றினை நடைமுறைப்படுத்துவதனூடாக இயல்பு வாழ்வை உறுதிப்படுத்துவதற்கும், மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடல் நடாத்துவதற்கும், என இரு நோக்கங்களுக்காக தலைநகர் கொழும்பில் உள்ள "றான்ஸ் ஏசியா" ஹோட்டலில் ஒக். 01, 02, 03ஆம் திகதிகளில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனங்கள் ஒன்றியத்தினது ஏற்பாட்டில் சிறுவரை இல்லங்களுக்குக் கொண்டு வருதல் [Bringing children home] என்கின்ற தலைப்பில் சர்வதேச மாநாடு நடைபெறவுள்ளது. பல்வேறு நாடுகளிலிருந்தும் கலந்து கொள்ளவுள்ள நிபுணர்கள், பேராளர்கள், அனுபவசாலிகள், கல்விமான்கள் மேற்படி விடயம் தொடர்பாகப் பல்வேறு கலந்துரையாடல்களினையும், நிகழ்வுகளினையும் நடத்துவர். இலங்கையைப் பொறுத்தவரை பல்லாண்டு காலமாக நடைபெற்ற போர் காரணமாக இடம்பெற்ற பல்வேறு சூழ்நிலைகளினாலும், சந்தர்ப்பங்களினாலும் வாழ்வைத் தொலைத்துவிட்டு அல்லலுறும் சிறுவர்களுக்கு இம் மாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகளும்; ஏனைய (சிறுவர்களுக்கு மட்டுமன்றி அனைத்தும்) இலங்கையருக்கும் இம்மாநாடானது சமாதானச் சூழலில் நடைபெறும் முதலாவது சர்வதேச மாநாடு - அதுவும் சிறுவர்களுக்கான என்பதனால் - நிச்சயம் பெருமை தேடித்தரும் என்பதில் ஐயமேதுமில்லை. இனி மாநாடு தொடர்பான மேலதிகமான தகவல்களினை நாம் சற்று விரிவாக நோக்குவோம்.

### பின்னணி

சிறுவர் உரிமைகள் சமவாயம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் 1989 நவம்பர் 20ம் திகதி அனைத்துலக பொது ஆவணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதனைத் தொடர்ந்து; 1991ம் ஆண்டு ஐ.நா. சபையின் அங்கத்துவ நாடுகள் அனைத்துலகச் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதனைத் தொடர்ந்து, அனேகமான நாடுகள் (இலங்கை உட்பட) ஆவணத்தில் கூறப்பட்டிருக்கும் உறுப்புரைகளினை மதித்து அமுல்படுத்தினாலும், அனேக நாடுகளில் நிகழும் போர் அல்லது அனர்த்த சூழ் நிலைகளில் சிறுவர்களது நலன்கள்/உரிமைகள் கேள்விக்குறியானதாகக் காணப்படுவதனை எம்மில் அனேகர் எமது நாளாந்த வாழ்வில் பல்வேறு சூழலில் கண்டுள்ளோம். இத்தகைய நிலைமைகளின் இன்று அனேகமான நாடுகளில் உள்நாட்டில் இடம் பெறும் சிவில் யுத்தம் காரணமாகவோ அல்லது நாடுகளுக்கு இடையே நடைபெறும் போர் காரணமாகவோ ஏற்பட்டு விடுகின்றது. இத்தகைய நிலைமைகளினால் இலங்கைளில் சிறுவர்கள் சேர்க்கப்படல், அனாதைகள் ஆக்கப்படல், தெருவோர சிறுவர்கள் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படல் போன்ற பல்வேறு சிக்கலான நிலைமைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். எனவே இவ்வாறான முடிவுகளில் இருந்து சிறுவர்களினை எங்ஙனம் பாதுகாத்தல் என்பது தொடர்பாகவும் இவ்வாறான நிலையில் இருந்து சிறுவரை இயல்பு வாழ்வுக்கு எங்ஙனம் கொண்டு வருதல் என்பது தொடர்பாகவும் இம்மாநாட்டு விடயங்கள் அமைந்திருக்கும்.

### மாநாட்டின் முக்கிய விடயங்கள்

சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் ஏற்கனவே இணையம் மூலமும், ஊடகங்களினூடாகவும் வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் ஏறத்தாழ 250 பேராளர்கள் இம்மாநாட்டில் பங்குபற்றுவதற்கு பல்வேறு நாடுகளிலிருந்தும் தமது பதிவுகளினை உறுதிப்படுத்தியுள்ளனர். இவர்களில் அநேகர் தமது அனுபவங்களினை / திட்டங்களினை அனைத்துப் பங்குபற்றுனர்க்குமான ஓர் சமர்ப்பணமாக [Presentation] கலந்துரையாடல் / விரிவுரை மூலம் சமர்ப்பணம் செய்வர். ஒவ்வொருவருடைய ஆக்கமும் (தனிப்பட்ட அல்லது அமைப்பினது) 20 நிமிடம் கொண்டதாக (10 நிமிடப் பொதுக் கலந்துரையாடல் நேரம் உட்பட) இருக்கும் இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்து உள்ளது. இச்சமர்ப்பணங்களில் கூறப்படும் விடயங்கள்/ ஆவணங்கள் யாவும் ஏற்பாட்டுக் குழுவினரது அனுமதி பெற்று சமர்ப்பணத்திற்காக காத்திருக்கின்றன. இத்தகைய சமர்ப்பணங்கள் / மாநாடு ஏற்கனவே குறிப்பிட்டது போல் பின்வரும் இரு நோக்கங்களினையே முதன்மையானதாக/ மையமாகக் கொண்டிருக்கும்.

1. நீடித்தகால / தீவிரமான ஆயுதம் சார் நெருக்கடியான ஒரே சூழ்நிலைகளில் சிறுவர்களுடன் வேலை செய்த இலங்கையரும் மற்றும் வெளிநாட்டவரும் தமது அனுபவங்களினையும், பயிற்சிகளினையும் ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பங்களினை வழங்குதல்.
2. நீண்ட கால நெருக்கடி நிலைமைகளிலிருந்து சிறுவரை விடுவித்துக் கொள்வதற்குத் தேவையான வழி வகைகளினை மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்களினை இனங்காணல்.

போன்ற நோக்கங்களினை கொண்டதாகவும் காணப்படும்.

பின்வரும் உபதலைப்புக்களும் மேற்படி நோக்கங்களுக்கு மேலதிகமாக சமர்ப்பணத்தில் மையப் படுத்தப்பட்டிருக்கும்.

- பாதுகாப்பு [protection]
- முன்னேற்றம் / மேம்பாடு [Development]
- பங்களிப்பு [Participation]

மேற்குறித்த உபதலைப்புக்களில் ஒன்றினை பிரதிபலிப்பதாகவும் அத்துடன் பின்வரும் விடயங்களில் ஒன்றினை மையப்படுத்தியதாகவும் காணப்படும்.

- கைவிடப்பட்ட சிறுவர்கள் [Seperated children]
- விளையாட்டும் பொழுது போக்கு அம்சங்களும் [Play & recreation]
- உளவியற் பாதுகாப்பு [Psychosocial care]
- சிறுவர் தற்கொலை [Suicide among children]
- சிறுவர் போராளிகள் [Children Soldiers]
- நெருக்கடியான சூழ்நிலைகளில் அல்லது அமைதி முயற்சிகளில் சிறுவரை ஈடுபடுத்தல் [Involving childresn in efforts on conflict resolation and peace building]

இவ்வாறான நோக்கங்களினையும், தலைப்புக்களினையும், உபபிரிவுகளில் ஒன்றையேனும் பிரதிபலிப்பதாக காணப்படும் சமர்ப்பணங்கள் / கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ள இம்மாநாடானது தென்கிழக்காசிய நாட்டில் காணப்படும் பிரபல ஹோட்டல்களில் ஒன்றான "றான்ஸ் ஏசியா" ஹோட்டலில் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### மாநாட்டின்போதான கண்காட்சி

மாநாடு நடைபெறும் தினங்களில் "போருக்குப் பின்பதான சிறுவர் வாழ்வு" என்கின்ற தலைப்பில் பல்வேறு மாவட்டச் சிறுவர்களும் வரைந்து அனுப்பிய ஓவியங்களில் தெரிவு செய்யப்பட்ட ஓவியங்களினைக் கொண்ட ஓவியக் கண்காட்சி நிகழ்வும் சிறப்பம்சமாக நடைபெறவுள்ளது. சிறுவர் தொடர்பாடல் குழுக்கள் [Kids in touch Groups] மூலம் இவ் ஓவியங்கள் தெரிவு செய்யப்பட்டு கண்காட்சிக்கு வைக்கப்பட தயாராக உள்ளன.

### யாழ் மாவட்டத்தின் பங்களிப்பு

மேற்படி மாநாட்டிற்கு சிறுவர் பாதுகாப்பு (ஐக்கிய இராச்சியம்) யாழ்ப்பாணம் தமது பங்காளர்களுடன் இணைந்து [Save the children (UK) with the partners) பல்வேறு வகைகளில் பங்களிப்புச் செய்துள்ளது.

1. ஓவியக் கண்காட்சிக்கு வேண்டிய ஓவியங்களினை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள குழுக்கள் மூலம் பெற்று யாழ் மாவட்டச் சிறுவர்களது பங்களிப்பை உறுதி செய்தமை.
2. சிறுவர் பாதுகாப்பு (ஐக்கிய இராச்சியம்) மற்றும் மாவட்டச் சிறுவர் பாதுகாப்புக் குழு [District child protection committee] இணைந்து யாழ் மாவட்ட சிறுவர்களது நிலைமை தொடர்பாகவும் சமர்ப்பணங்களினைச் செய்ய உள்ளமை.
3. மாநாட்டின் விடயங்களினை ஊடகங்கள் மூலம் பரப்புரை செய்தல் போன்ற இன்னோரன்ன விடயங்களினை கவனத்தில் கொண்டுள்ளது.

### நமது பங்களிப்பு

மாநாட்டில் பங்குபற்றுவது மட்டுமன்றி மக்களாகிய நாம் ஏதோ ஒரு வகையில் சிறுவர்களோடு தொடர்புடையவர்கள் என்ற வகையில் நாம் எமதளவில் செய்ய வேண்டிய விடயங்கள் நிறையவே உண்டு. மாநாட்டின் விடயங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளல், அங்கு எடுக்கப்படும் முடிவுகள் குறித்து அறிந்து கொள்ளல், அவற்றின் நடைமுறைக்கு/ அமுல்படுத்தலுக்கு [Implementation or, come into force] சிறுவர் உரிமைகளினை பெற்றுக் கொடுக்கும் பெரியவர்கள் என்ற வகையில் இயன்றளவு உதவுதல், ஒக்டோபர்1 (சிறுவர் தினம்) உட்பட எமது நாளாந்தச் செயற்பாடுகளில் சிறுவர்களது உரிமைகளினை அல்லது சிறந்த நலன்களினையே மையமாகவும், முதன்மையாகவும் கொள்ளல் போன்றன எமது பங்களிப்பாக உள்ளது.


எனவே, இத்தகைய சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த மாநாடு நமது நாட்டில் நடைபெறுவதையிட்டு நாம் அனைவரும் பெருமைப்படும் அதேவேளை மாநாட்டில் எடுக்கப்படும் தீர்மானங்களினை அறிந்துகொள்ள முயற்சிக்கும் அதேவேளை அத்தீர்மானங்களினை யதார்த்தமாக்குவதில் எமது பங்கினையும், பொறுப்பினையும் [Roles and responsibilities] நன்கு உணர்ந்து செயற்படுவதனூடாக நமது நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் நமது செயற்பாடுகளினை சிறுவர்களினை மையப்படுத்தி, முதன்மை நிலையில் செயற்பட திடசங்கற்பம் கொள்வோமாக.

**சிறுவர்களது நலன்கள் தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்கள் சம்பந்தப்பட்ட அமைப்புக்களினால் "அமைதியான சூழ்நிலை" என்று கூறப்படுகின்ற சமகாலத்திலும் (இலங்கையிலும்) மதிக்கப்படாத சூழ்நிலை நிலவுவதனாலும் அத்தகைய ஒப்பந்தங்களில் கூறப்பட்ட விடயங்களில் ஓர் அசமந்தப் போக்குக் கடைப்பிடிக்கப்படுவதனாலும் இம்மாநாடு, மாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகள் இலங்கை அரசையும் மற்றும் அமைப்புக்களினையும் சிறுவர் நலன் தொடர்பாகச் சிந்திக்க வைக்கும்/செயற்படத்தூண்டச் செய்யும் என நாம் அனைவருமே எதிர்பார்க்கலாம்.**

**ஜெகநாதன் தற்பரன்**
(நிகழ்ச்சித் திட்ட அலுவலர்)



நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சிற்பாசாரியார் விஸ்வஸ்ரீசெல்லையா விஸ்வலிங்கம் சென்னை சைதாப்பேட்டை பெரிய பாளையத்து அம்மன் கோயில் நிர்வாகத்தினரால் பொன்னாடை போர்த்தி விருதுவழங்கி கௌரவிக்கப்படுகிறார்.



கொல்கொத்தா ஸ்ரீராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த தவத்திரு சுவாமி ஆத்மப்பிரியானந்த மகாராஜ் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த சமயம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சொற்பொழிவாற்றுவதையும் செவிமடுக்க வந்த அறிஞர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.


## கல்வி எமது பிறப்புரிமை



"எனக்கு கல்வி கற்க விருப்பம் இருக்கு!! ஆனால் எனது பெற்றோர் கற்கவிடாமல் அயலவர் வீடுகளுக்கு வேலைக்குச் செல்லுமாறு கூறுகின்றனர்!!! என்னால் என்ன செய்ய முடியும்".

அன்புள்ள பெற்றோரே! வளர்ந்தவர்களே! நாளைய சிற்பிகளை இன்றே வீணாக்காதீர்கள்! கல்வி கற்கும் வயதில் அவர்களது அவ் உரிமையை வழங்கிவிட முனைப்புடன் செயற்படுங்கள்.

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு
அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

தே. பிரகாசினி
சிறுவர் பரிந்துரைத்தல் செயற்பாட்டுக்குழு
பிரதேச செயலகம்,
கரவெட்டி.

அனுசரணை
சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ)

[C/5041]

# பிறந்த திகதிக்கு

கள், நூல் போன்றவற்றாலும் மற்றும் சாப்பாட்டுப் பொருளாலும், கலை சம்பந்தமான தொழிலாலும் லாபத்தைப் பெறுகின்றனர்.

### நோய்

இவர்களுக்கு இரத்தக் கொதிப்பு, வாயுக்கோளாறு, மூட்டுவலி போன்ற வியாதிகள் வாவாய்ப்பு உண்டு. மனப் பீதியும் ஏற்படலாம். ஆனால் பொருத்தமானதாகப் பெயர் அமைந்து விட்டால் எந்த வியாதியும் அதிகமாக வராது.

### பெயர் அமைக்கும் முறை

இவர்கள் தங்களுடைய பெயரை 15,24,33,42,51, 69 போன்ற எண்களிலும் 34,43 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண் - 6,7. யோகமான தேதிகள்—6,15, 24,7,16,25 யோகமான மோதிரக்கல்—வைடூரியம், முத்து, சந்திர காந்தக்கல், ஜேட். யோகமான நிறம்—வெளிர்மஞ்சள், வெளிர் நீலம்,பச்சை. ஆகாத தேதிகள்—9,18,27 ஆகாத நிறம் சிவப்பு.

### உடல் எண்-2 உயிர் எண்-8

2, 11, 20, 29 போன்ற தேதிகளில் பிறந்து,இவர்களது தேதி,மாதம், வருடம், மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 8 வருமேயானால் சந்திரன்,சனிபோன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவார்.சந்திரன் அடிக்கடி இடம்மாறிச் செயல்படுபவர். ஆனால் சனியோ நீண்டநாட்கள் இருந்து நல்லதையும்,கெட்டதையும் செய்பவர்.

### மனம் கலங்குபவர்

இந்த எண்களில் பிறப்பவர்களில் சிலர் உயரமாகவும், சிலர் குள்ளமாகவும் இருப்பர். இளமையிலேயே இவர்கள் காதல் வயப்பட்டு விடுவதால் வேதனைக்குள்ளாகின்றனர். மிகுந்தவசீகரமான தோற்றமும், உடல் வலிமையும கொண்ட இவர்கள்,திடீரென்று மனபபீதியால், தன்னம்பிக்கையிழந்து உளறுவர். கனவு வருவதால்,பில்லி சூனியம போனறவற்றால் இருக்குமோ என்று மனங்கலங்குவர்.ஆனால பெயர் நன்கு அமைந்து விட்டால் மேற்குறிபபிட்ட கெட்டபலன்கள இலலாது மென்மேலும் முன்னேறுவர்.

பொதுவாக இவர்கள் எல்லோரிடமும் அனபாகப் பழகுவர்.ஆனால் பிடிவாத குணம் காணபபடும்.கையில் காசு உளள போது தாராளமாகச் செலவு செய்வர்.ஆனால் பணம இல்லாத போது,வைத்தியம்பிடித்தவர்போலகாணப்படுவர் இவர்கள் மற்றவர்களை மகிழ்விக்கும் கலையில் ஈடுபட்டு அதில் பெரும் புகழைப் பெறுவர்.அதோடு ரும்புசமபந்தமானதொழில் மெக்கானிசம, கண்ட்ராக்ட் மூலமும் பெரும் செல்வம் சேர்பபர் இவர்களுக்கு வாகன யோகம் உணடு.சிலர் கடல் கடந்த பயணங்கள மூலம் லாபம் பெறுவர்.

### சந்தேகம்

இவர்களது மனம் கடல் அலை போனறு காணப்படும். எதிலும் சந்தேகம் ஏற்படுவது மட்டும அலலாதுதான செய்த காரியங்களையே சரியில்லை என்று நினைத்துக்குழமபுவர். பிறரைச் சிறிதும நமபாதவர். ஆனால் பெயர் பொருத்தமனதாக அமைந்தவர்கள் எப்பொழுதும் வெற்றி வீரராகக் காடசியளிப்பர். கல்வியில் ஆர்வம கொண்ட இவர்கள் தனது நினைவாற்றல குறைவின காரணமாகமுககியமான கட்டங்ளிலதோல்வியுறுவர்.

ஆனால தொழில் நுட்பக் கல்வியில் சிறந்து விளங்குவர். இவர்களின் மனதுக்குப்பிடித்துவிட்டால் செட்டதையும் நல்ல தென வாதாடுவர். கேள்விகேட்பதில் வல்லவர். எதையும் உடனே ஒத்துக் கொள்ள மாட்டார்,கடவுள் நம்பிக்கை கொண்டஇவர்கள் கோவிலில் போய் வணங்குவதை விட,தன்மனதால் எங்கும் கடவுளைத் தியானிக்கலாம் என்ற கொள்கை கொண்டவர்.ஆனால் பெரியோர்களின் வேண்டுதலுக்கு இணங்க சிறிது மனம் மாறிக் கோவிலுக்குச்செல்வர்.

### மனம்எங்கேயோ போய் விடும்

தங்களுடைய வேலையைத் தீவிரமாகச் செய்து கொண்டிருப்பர்.அப்படிச் செய்து கொண்டிருக்கும் நேரத்தில் ஒருசிறு தவறு ஏற்பாட்டல் போதும்,உடனே ஒரேகுழப்பமாகிவிடும் இவர்கள் எவ்வளவு திடமாகச் செயல் பட்டார்களோ அவ்வளவுக்கும் திடசித்தம் குறைந்து விரக்தியடைவர்,ஆனால் பெயர் நன்கு அமைந்து விட்டால் இந்தக் குழப்பம்மாறி வெற்றி வீரராகக் காட்சியளிப்பார். தனியாகச் செல்கின்றபோது, கற்பனை செய்து கொண்டும். எதிர்காலத் திட்டத்தை வகுத்துக் கொண்டும் செல்வர். சில நேரங்களில் நண்பர்கள் பேசிக கொண்டிருககும்போது கேட்டுக் கொண்டேயிருப்பர். ஆனால் இவர்களது மனம் எங்கோ போய்க்கொண்டே இருக்கும். இதனால் நண்பர்கள் இவர்களுக்கு, ''அப்சண்ட் மைண்ட்மான்'' என்று பெயர் சூட்டி விடுவர். இதனால் இதைப் போக்கப் பழகிக் கொளள வேண்டும்.

பெரியோர்களை மதித்தலும், மரியாதையும்கொண்டு பழகும் இவர்கள், சில நேரங்களில் முன்கோபததால் அத்துமீறி நடந்து விடுவர். ஆனால் நடந்தபின் வருந்துவர். நன்கு பெயரை அமைத்துக் கொண்டால் வாழ்க்கை சீரும்,சிறப்புமாக அமையும்.

### தொழில்

இவர்களுக்கு பகட்டு சம்பந்தமான தொழில் அனைத்தும சிறந்தவையே, வாகனம், மெட்டல், மெக்கானிசம், கண்ட்ராக்ட், கமிஷன்,எதையும் இயக்குதல போன்ற தொழிலாலும கலை சம்பந்தமான தொழிலாலும் பணம் ஈட்டுவர்.

### நோய்

இவர்களுக்கு முதுகுவலி, இடுப்புவலி, தலைவலி, மனக குழப்பம்,வயிற்றுக்கோளாறு, உடலுறவு சம்பந்தமான வியாதிகள் வர வாய்ப்பிருப்பதால் கீழே குறிப்பிட்ட பொருத்தமான எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளவும்.

### பெயர் அமைக்கும் முறை

சந்திரனும், சனியும் ஆதிக்கம் கொணட இவர்களுககுச் சுக்கிரனாகிய 6,24,33,42, 51, 69 போன்ற எண்களிலும் புதனாகிய 14,23,32, 41,50,59 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளுவது சிறப்பாகும்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண் -7,5,6, யோகமான தேதிகள்-7,16, 25;5,14,23;6,15,24 யோகமான மோதிரக்கல் - வைடூரியம்,முத்து சந்திரகாந்தக்கல், யோகமான நிறம் - பச்சை, கருநீலம், மஞ்சள் ஆகாத நிறம் கறுப்பு, சிவப்பு ஆகாத தேதிகள்- 9,18,27.

(தொடரும்)

# புனர் நிர்மாணப் பணிகளுக்கு

# பிரிட்டிஷ் அரசு உதவி வழங்கும்

## உதவிச்செயலர் மைக்கல் பிளேயர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் போரினால் சீரழிந்துள்ள பிரதேசங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கான திட்டங்களுக்கு உதவி வழங்க பிரிட்டன் முன்வந்துள்ளது.

விஞ்ஞான தொழில்நுட்ப பொருளாதார மறு சீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவை பிரிட்டிஷ் வெளிநாட்டு பொதுநலவாய விவகாரங்களுக்கான பாராளுமன்ற உதவிச் செயலாளர் மைக்கல் பிளேயர் நேற்று முன் தினம் லண்டனில் சந்தித்த போதே இவ்வுறுதியை அளித்துள்ளார்.

இச் சந்திப்பின் போது, இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகள் பிரிட்டனுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன எனவும்,

இலங்கையின் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான சர்வதேச உதவிவழங்கும் மாநாட்டில் முக்கிய பங்கு வகிப்பதற்கும் பிரிட்டிஷ் விரும்புவதாகவும் அத்தோடு அம் மாநாட்டைதான் வரவேற்பதாகவும் பிளேயர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மிலிந்த மொறகொட இச் சந்திப்பின் போது கருத்து தெரிவிக்கையில்; சர்வதேச உதவி வழங்கும் மாநாட்டில், புனர்வாழ்வு அபிவிருத்தி நடவடிக்கை குறித்து, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பரிசீலனைக்கென அரசு குறிப்பிட்ட சில யோசனைகளை முன் வைக்கும் என்றார்.

அத்துடன், பிளேயரை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு கேட்டுள்ளதுடன், பிரிட்டிஷின் வேறு பல சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்தித்து பேசியுள்ளார்.

(உ-8)

# நுவரெலியா நீர் ஊற்றுகள் வற்றுகின்றன

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டத்தில் மழை குறைந்துள்ளதால் நீர் ஊற்றுக்கள் வற்றும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் குடிநீர்ப் பிரச்சினை தோன்றியுள்ளதாகவும் குடிநீர் சேகரித்து வைக்கிருக்கும் தண்ணீர் தாங்கிகளிலும் நீர் மட்டம் குறைந்துள்ளதாகவும் அங்கு குழாய் நீர் விநியோகம் குறைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-10)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா- செங்குந்தா இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தின விழாவும் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க் கிழமை மு. ப. 10மணிக்கு கல்லூரி மண்டபத்தில அதிபர் திருமதி சி விஸ்வலிங்கம் தலைமையில் இடம பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கொழும்பு பிராந்திய தொலைத் தொடர்பு நிலைய முகாமையாளர் வி. யோகேந்திரனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் வ. சிறீதரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ)

# தென்மராட்சியின் 40 குளங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேசத்தில் நியாப் திட்டத்தின் கீழ் 40 குளங்கள் மாற்றும் வாய்க்கால்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இத்திட்டங்களை முன்னுரிமைப்படுத்தித் தரும்படி நியாப் அலுவலகம், பிரதேச செயலரைக் கோரியுள்ளது. இதன் பொருட்டு பிரதேச செயலர் குழுவொன்றினையும் நியமித்துள்ளார்.(உ-77

# முதலாம் திகதி முதல் சாவகச்சேரி சந்தையை நகரசபை பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபை எதிர்வரும் முதலாம் ஆம் திகதி முதல் சாவகச்சேரி சந்தையை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்கவுள்ளதாக சபையின் செயலாளர் எம். எஸ். சரவணபவ தெரிவித்துள்ளார்.

அன்று முதல் சந்தையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களிடம் இருந்து சந்தை வரி அறவிடப்படும் எனவும் அறியப்படுகின்றது.

(உ-77)

# சாவகச்சேரி ப. நோ. கூட்டுறவுச் சங்கத்திற்கு 3 கோடி சொத்திழப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு யுத்தம் மற்றும் இடப்பெயர்வு காரணமாக 3 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அண்மைய மதிப்பீடுகள் மூலம் தெரியவந்துள்ளது.

இத்தொகையில் ஒன்றரைக் கோடி ரூபா தளபாட இழப்பாகவும் ஒன்றரைக் கோடி பொருள்கள் இழப்பாகவும் ஏற்பட்டுள்ளதென சங்கத்தின் பொது முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினை கே. என்.பாலச்சந்திரனைத் தலைவராகக் கொண்ட புதிய பணிப்பாளர் சபை கடந்த வாரம் பொறுப்பேற்றுள்ளது.

(உ-77)

# வடக்கு-கிழக்கில் சுமார்6000 ஆசிரியர் வெற்றிடங்கள்

## பிரதமரிடம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வடக்கு- கிழககு மாகாணத்தில் உள்ள 24 கல்வி வலயங்களிலும் 6ஆயிரத்துக்கும்மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுவதாக இலங்கை ஐக்கிய பட்டதாரி ஆசிரியர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மகஜர் ஒன்றை இலங்கைப் பட்டதாரி ஆசிரியர் அமைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் கல்வி மனித வள அமைச்சர் கருணா சேனகொடித்துவக்கிற்கும் அனுப்பி வைத்துள்ளது.

அவ் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாவது;

அண்மையில் வடக்கு-கிழக்கில் 743 பேர் பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், அரசாங்கத்தின் வாக்குறுதிக்கு அமைய 1000 பட்டதாரி ஆசிரியர் நியமனம் வடக்கு- கிழக்கில் வழங்கப் படவில்லை.

அத்துடன் கணிதம், ஆங்கிலம், சங்கீதம் ஆகிய பாடங்களை கற்பிக்க கூடிய வகையில் அரசாங்கம் புதிய நியமனங்களை வழங்கி வடக்கு -கிழக்கு மாகாண கல்வி நிலையை உயர்த்த வேண்டும் என மேற்படி மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(உ- 10)

# ஜனாதிபதியின் கீழ் பொலிஸ் திணைக்களத்தை செயற்படுத்த நடவடிக்கை

## அனுரா எச்சரிக்கை

(கொழும்பு)

பொலிஸார் தமது கடமைகளை ஒழுங்காக செய்யத் தவறும் பட்சத்தில் பொலிஸ் திணைக்களத்தினை ஆறுமாத காலத்திற்குள் ஜனாதிபதியின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

பேருவளையில் உள்ள முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டீ. பண்டார நாயக்காவின் மீளமைக்கப்பட்ட உருவச்சிலையை திறந்து வைத்து பேசிய போதே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடந்து கருத்து தெரிவிக்கையில; மறைந்தமுன்னாள் பிரதமரும் எனதுதந்தையுமான பண்டார நாயக்காவின் உருவச் சிலைக்கு சேதம் விளைவித்ததன் மூலம் ஐக்கிய தேசியமுன்னணி அரசாங்கத்தின் அரசியல் நிலைப்பாடு வெளியாகியுள்ளது.

இவ்வாறான செயல்கள் தடுத்து நிறுத்தப்படா விட்டால்,நிறை வேற்றுஅதிகாரங்களை பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு ஏற்படலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

(உ-8)

காலத்தினாற் செய்த நன்றி
சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது.
குறள்

வலம்புரி

## கைதிகள் பரிமாற்றம்

புரிந்துணர்வு உடன்படிக்கை, தாய்லாந்தில் சமாதானப் பேச்சு இவற்றைத் தொடர்ந்து கைதிகள் பரிமாற்றம் என்பன இடம் பெற்றுள்ளமை சமாதானத்தின் நகர்வு முன்னேற்றம் கண்டு வருவதைச் சுட்டி நிற்கின்றது.

அரசும் விடுதலைப்புலிகளும் தமது தரப்பிலிருந்த கைதிகளை விடுதலை செய்துள்ளனர். எனினும், இவை முழுமையாக நடைபெறவில்லை. புலிகள் தம்மால் கைது செய்யப்பட்ட ஏழு இராணுவத்தினரையும் அரசு தென்னிலங்கைச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 13 கைதிகளையும் விடுதலை செய்துள்ளனர்.

கைதிகளின் பரிமாற்றத்தில் சட்டஇறுக்கங்கள் இருப்பினும், கைதிகள் பரிமாற்றம் நாட்டில் சமாதானத்தைத் தோற்றுவிக்குமாயின் அதனைத் தடுக்கும் சட்டங்களை உடைத்தெறிவது ஓர் பொறுப்புள்ள அரசாங்கத்தின் கடமையாக இருக்கும். நேற்றைய தினம் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற கைதிகளின் பரிமாற்றம் ஓர் ஆரம்ப நிகழ்வாக இருக்குமே அன்றிஅது பூமுமைஎன்று சொல்லிவிட முடியாது.

இன்னமும் தென்னிலங்கைச் சிறைச்சாலைகளில் ஆயிரக்கணக்கானதமிழ்க் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் விடுதலை, பரிமாற்றத்தினூடாக நடைபெற வேண்டுமாயின் அது நடைமுறைச் சாத்தியமன்று.

எனவே சமாதான முயற்சியை முன்னெடுத்துள்ள அரசு பொறுப்புணர்வோடு தனது முயற்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமாயின் தென்னிலங்கைச் சிறைகளில் வாடுகின்ற - பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட அனைத்துக் கைதிகளையும் விடுதலை செய்வது மிக மிக அவசியமாகும். கைதிகளின் விடுதலை அரசின் சமாதான ஆவலை மேலும் உறுதிப்படுத்துவதாக அமையும்.

அரசும் - விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அப்பாவித் தமிழ்க் கைதிகள் சிறைகளில் வாடுவது எவ்வகையிலும் நியாயமாகாது.

# ஆத்மாவின் அழியாமையில் நம்பிக்கையுள்ளவர்

# பரலோக வாழ்க்கையைப் பெறுவது திண்ணம்



## பரமபிதா காட்டிய பாதை

இயேசுக் கிறிஸ்து தம்மைப் பின்பற்றியவர்களோடு இங்கே பூமியில் இருந்து கொண்டிருக்கையில் பரலோக வாழ்க்கையைப் பற்றி அவர்களுடன் பேசினார். அவர்களுக்காக ஒரு இடத்தை ஆயத்தம் செய்யத்தான் போகிறார் என்றும், காலா காலத்தில் அவர்கள் அங்கே அவருடன் இருப்பார்கள் என்றும் அவர்களிடம் கூறினார். (யோவான் 14-1-3)இப்படிப்பட்ட பரலோக வாழ்க்கையில் இலட்சக்கணக்கான ஆட்கள் தங்கள் இருதயத்தை வைத்திருக்கின்றனர். அவர்களுக்கு இது, இந்த வாழ்க்கையின் துன்பங்களிலிருந்து விடுதலையாகும் ஒரு நோக்கைக் குறித்திருக்கின்றது. ஆனால் சில ஆட்கள் பரலோகத்திற்குப் போகும்படியாக, கடவுள் ஏன் ஏற்பாடு செய்திருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் அங்கே என்ன செய்வார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?

தம்முடைய பூமிக்குரிய ஊழிய காலத்தின்போது இயேசு கடவுளுடைய இராச்சியத்தைப்பற்றி அதிகம் கூறினார். ராஜ்யத்தின் மூலமாக கடவுளுடைய சித்தம் இங்கே பூமியில செய்யப்படுவதற்காக ஜெபிக்கும்படி அவர் தம்மைப் பின்பற்றியவர்களுக்குக் கற்பித்தார். இவ்விதமாய் இந்தப் பூமி மனித வர்க்கத்திற்கு ஒரு இன்பகரமான வீடாக ஆகும். ஆனால் இந்த ராஜ்யம் அல்லது அரசாங்கம தானே பரலோகத்திலுள்ள கடவுளுடையதாக இருக்கும். இந்தக் காரணத்தினிமித்தமாக இயேசு அடிக்கடி அதைப் 'பரலோகங்களின் ராஜ்யம்' என்பதாகக் குறிப்பிட்டார். (மத்தேயு 5;20,6:9,10 NW) அவர் பின்வருமாறு சொன்னபோது என்ன அர்த்தம் கொண்டார் என்பதை விளங்கிக் கொள்ள இது நமக்கு உதவி செய்கிறது. 'பயப்படாதே சிறு மந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள பிதா பிரியமாயிருக்கிறார்' (லூக்கா. 12:32), ஆம் மனிதவர்க்கம் முழுவதின் மீதும் ஆளப் போகிற இந்தப் பரலோக அரசாங்கத்தில் ஒரு பங்கை கடவுள் இந்தச் சிறு மந்தைக்குக் கொடுப்பார்.

### கடவுளின் பிள்ளைகள்

பரலோக சேவையில் பங்கு கொள்ள கடவுளால் அழைக்கப்படுகிறவர்கள் எண்ணிக்கையில் சொற்பபேரே யாவர். இயேசு சொன்ன பிரகாரம் அவர்கள் ஒரு ''சிறு மந்தையே'' தான் ''சிறு மந்தையைச் சேர்ந்தவனா என்பதை ஒருவன் எப்படி அறிவது. கடவுள் தங்களைப் பரலோக வாழ்க்கைக்கு அழைத்திருக்கிறார் என்று இந்தச் சிறு மந்தையின் அங்கத்தினர் அறிந்திருக்கின்றனர். கடவுளுடைய ஆவி கிரியை செய்வதன் மூலமாகவே, இந்த ஆவி பரலோக வாழ்க்கைக்குரிய நம்பிக்கையை அவர்களில் நாட்டி வளர்த்து வருகிறது. இந்தச் சிறு மந்தையில் ஒருவனாகிய அப்போஸ்தலனாகிய பவுல் ''நாம் கடவுளுடைய பிள்ளைகளென்று இந்த ஆவி தானே நம்முடைய ஆவியுடன் சாட்சி பகருகின்றது அப்படி நாம் பிள்ளைகளானால், நாம் சுதந்திரராயிருக்கிறோம். நிச்சயமாகவே கடவுளின் சுதந்திரர், ஆனால் கிறிஸ்துவோடு உடன் சுதந்திரர், அவரோடு கூட நாம் மகிமைப்படும் படியாக அவரோடு கூடப் பாடுபடுவோமானால் அப்படியாகும். (ரோமர் 8, 16, 17 NW) கடவுளுடைய ஆவி கிரியை செய்வதானது, இப்படிப்பட்ட ஒரு ஆளின் முழு மனோபாவத்தையும் மாற்றுகிறது. இவ் விதமாய் அவனுடைய நினைவுகளும், ஜெபங்களும் இந்தப் பரலோக நம்பிக்கையை நோக்காகக் கொண்டு கடவுளை சேவிப்பதன் பேரிலேயே ஊன்ற வைக்கப்படுகின்றன. பரலோகத்தில் கிறிஸ்துவுடன் இருப்பதே பூமிக்குரிய எந்த உறவைப் பார்க்கிலும் அவனுக்கு அதிக முக்கிய மானதாயிருக்கிறது.

### ஆத்துமாவின் அழியாமை

உங்களுக்குப் பரலோக வாழ்க்கையைக் குறித்து நீங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கையில், மனித ஆத்மாவின் அழியாமையில் நம்பிக்கை கொண்டிருந்தீர்களா? அப்படியானால், உங்கள் ஆத்துமா பரலோகத்திற்குப் போகும் என்று நீங்கள் நம்பியிருந்திருக்கலாம். என்பது விளங்கத்தக்கதே, அப்படியானால், இந்தக் காரியத்தில், வழி நடத்துதலுக்காக வேத வார்த்தைகளை நாம் நோக்கியிருக்க வேண்டும். தீவிர உணர்ச்சிகளோ அல்லது ஏற்கனவே நம்மனதிலுள்ள வேத பூர்வமற்ற நம்பிக்கைகளோ நம்முடைய யோசனையைக் குழப்பிப் போட நாம் இடங்கொடுக்கக் கூடாது. பரலோக வாழ்க்கையை அடைகிறவர்கள். அதைத் தங்களுக்குத் தாங்களே தெரிந்து கொள்ளும் ஆட்களல்ல, இந்தத் தெரிந்து கொள்ளுதலைச் செய்கிறவர்கடவுளே. (2தெசலோனிக்கேயர். 2:13, 14),

தொகுப்பு;
**மதிவாணர்**

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து

# சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்

## சோதிடபலன்

(சென்றவாரத் தொடர்ச்சி)
**உடல்எண்-2- உயிர்எண்-7**

2,11,20,29 போன்றதிகதிகளில் பிறந்து தேதி, மாதம் வருடம இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 7வருமேயானால் இவர்கள் சந்திரன்,கேது ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்களிற் சிலர்பார்ப்பதற்குஉயர மானவராகவும் தன் உடம்பிற்குத் தகுந்தாற் போல சதைப் பற்றும் கொண்டு காட்சியளிப்பர். நல்ல நிர்வாகத்திறமையும், அன்புள்ளமும் கொண்டவாழ்க்கைத் துணைவர் இவர்களுக்கு அமைந்து விடுவதால்குடும்ப வாழ்க்கை சிறப்படையும். கல்வி பொருளாதாரவசதி எல்லாம் நன்றாக அமைந்துவிடும். ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால் கஷ்டத்திற்குள்ளாவர்

### மனக்கட்டுப்பாட்டால் சித்திகள்

இந்த எண்ணிக்கையில் கஷ்டப்படுபவர்கள் தமது பிறந்த தேதிஎண்களுக்குப் பொருத்தமானதாகப் பெயரை மாற்றி அமைத்துக் கொண்டால் மிக மேன்மையடைவர், நேர்மையும், பிறர்கஷ்டத்தைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாத மன நிலையும்கொண்ட இவர்கள் எப்பொழுதும் தனிமையில் சிந்தனை செய்து கொண்டிருப்பர். தனது வாழ்க்கையைக் குறிக்கோளுடன் ஆரம்பித்து வெற்றியடையும் பாக்கியம் உள்ளவர்கள் மனக் கட்டுப்பாட்டால் வரக் கூடிய சித்திகள் எளிதில்வரும். தெய்வபக்தி இவர்களிடம் அதிகம் காணப்படும். நல்ல ஆரோக்கியமுடன் வாழ்க்கை நடத்தும் இவர்கள் எப்பொழுதும் அளவோடு பேசி நிறுத்திக் கொள்வர். தனக்கு ஒரு எண்ணம் வந்தால் காரசாரமாகப் பேசுவர். சங்கீதம், தெய்வீகம், மற்றும் கலைகள் சம்பந்தமான விஷயங்களில் அதிக நாட்டமுடைய இவர்கள் ஏதாவது ஒருபாட்டை முணுமுணுத்துக் கொண்டேயிருப்பர்.

### எழுத்து மூலம் சரமாரி

ஏதாவது ஒரு பிரச்சினை வந்து விட்டால் முகத்தைச் சுளித்துக் கொண்டு கடிந்து பேசுவர். எதையும் துணிந்து எதிர்த்துப் பேசும் இவர்கள் எழுதுதல் மூலம் தன் கருத்துக்களைச் சரமாரியாகப் பொழிவர். சிலர் இரசாயன ஆராய்ச்சி செய்வதாலும், சாயங்கள் காய்ச்சுவதாலும் பொருள் சேர்ப்பர். பொதுவாக இந்த எண்ணில் பிறந்தவர்கள் நல்ல புகழும், பெரும் செல்வமும் சேர்க்கும் பாக்கியமுடையவர்களே. ஆனால் பெயரைப் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டு சிறப்பாக வாழவர்,

**ஆர். ஐ. துரைமுருகர்**

தூய்மையாகக் காட்சியளிப்பர்.

இந்த எண்களில் பிறந்த அன்பர்களுக்கு பொருத்தமான பெயரை அமைத்துக் கொடுத்தவுடன் உத்தியோக உயர்வும், பொருளாதாரவசதியும் பெருகி வாழ்வதைக் காணக் கூடியதாக இருந்தது. இவர்கள் சில நேரங்களில் நன்கு பேசுவர்; ஆனால் சிறு பிரச்சினைகள் வந்தால் மனதைக் குழப்பிக் கொண்டிருப்பர். மிதமிஞ்சின கற்பனா சக்திபடைத்த இவர்கள் தனிமையில் இருந்து பல திட்டங்களைப் போட்டுக் கொண்டிருப்பர். மற்றவர்களோடு ஒட்டிப் போகும் தன்மை குறைவாக இருப்பதால் எப்பொழு

### தொழில்

இரசாயன சம்பந்தமான தொழிலாலும், எழுத்தாலுங் பச்சைப் பொருள்கள் சம்பந்தமான தொழிலாலும்,சாயந்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்


## மேலான மதம்

பிறர்க்கு நன்மை செய்வதே மேலான மதம். அகம் பாவமோ, பிரதிபலனை, எதிர்பார்த்தோ, இல்லாமல் ஒவ்வொரு வாரமும் சிலமணி நேரமாவது, சுயநலமற்ற தொண்டாற்றுங்கள். உங்கள் கடமைகளை இதே உற்சாகத்துடன் செய்யுங்கள். கடமையைச் சரியாகச் செய்தல் போற்றுதலுக்குரியதாகும். இதனைக் கடவுளுக்கு அர்ப்பணியுங்கள். உங்களிடம் உள்ளவற்றைப்பிறருடன் பங்கிட்டுக் கொள்ளுங்கள். உலகம் உங்கள் குடும்பமாயிருக்கட்டும். சுயநலத்தை அகற்றுங்கள். இவைகளே மேலான மதக்கொள்கை.

சுவாமி சிவானந்தர்



கடற்படைத்தளபதியுடன் போயா கொட



பெற்ற தந்தை தாயுடன் விடுதலையான புலி வீரன்



பெற்ற தந்தையுடன் விடுதலையான படைவீரன்

# கட்டுநாயக்கா தாக்குதல் சம்பவம்

# 6000 பக்கங்களில் விசாரணை அறிக்கை

## சட்டமா அதிபரிடம் கையளிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான தாக்குதல் குறித்த முழுமையான விசாரணை அறிக்கையை இரகசியப் பொலிஸ் உயரதிகாரி சட்டமா அதிபர் சி.கமலசபேசனிடம் கையளித்துள்ளார்.

ஆறாயிரம் பக்கங்கள் கொண்ட இவ் விசாரணை அறிக்கையை சட்டமா அதிபர், சிரேஷ்ட அரச சட்ட தரணிகள் குழுவிடம் ஆராய்வதற்காக ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விமானப் படைத்தளம் மீதான தாக்குதல் சம்பவத்தை அடுத்து சந்தேகத்தின் பேரில் 100 பேர் வரை கைது செய்யப்பட்டிருந்தனர். பின்னர் 60 பேர் வரை விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர். மேலும் பலர் பிணையிலும் சென்றுள்ளனர்.

இதேவேளை சந்தேக நபர்களில் ஐந்து பேருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய சட்டமா அதிபர் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரியவருகிறது. (இ)

### அன்பு மாணவர்களே!

உங்களின் கவிதைத் திறனை வெளிப்படுத்த நவராத்திரிக் காலத்தில் வலம்புரியில் வெளிவரும்

**நவராத்திரி பாமாலைக்கு**

4 தொடக்கம் 8 வரிக்குட்பட்ட கவிதைப் பாமாலைகளை அனுப்பி வையுங்கள்.

**மூ.குறிப்பு:** மாணவர்களுக்கு மட்டும் இதில் சந்தர்ப்பம் வழங்கப்படுவதால் மாணவர்கள் தமது சொந்த ஆக்கத்தை மட்டுமே அனுப்பி வைக்க வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :-

''நவராத்திரி பாமாலை''
வலம்புரி
இல.15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

### திருடனைப் பிடிக்க உதவிய உத்தமர்களுக்கு நன்றிகள்

எமது வீட்டில் நடந்த திருட்டுச் சம்பவத்தை கேள்விப்பட்ட உடன் திருடனைப் பிடிக்க பிரிவு பிரிவுகளாக வந்த வேலணை மேற்கு, புளியங்கூடல், யாழ்ப்பாணம், பருத்தித்துறை இளைஞரகளுக்கும், மன்னார் பேசாலை போன்ற இடங்களுக்கு பொறுபபாக நின்ற இந்திரன் அண்ணன், நகுலேஸ்வரன் அவர்களுக்கும், தமிழீழ கடற்புலிகள், தமிழீழ அரசியல் பிரிவினர், தமிழீழ காவற்துறை, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம், எனது நண்பர்கள், உற்றார்கள், உறவினர்கள், நலன்விரும்பிகள், மன்னார் மாவட்ட ஆட்டோ சாரதிகள், இராமேஸ்வரம் இறங்குதுறையில் காத்து நின்ற எமது நண்பர்கள், E.P.D.P உறுப்பினர்கள், வாகனங்கள் தந்துதவிய உத்தமர்கள், கேட்ட நேரத்தில் உடனுக்குடன் செய்திகளை வெளியிட்டு துணிந்து நின்று திருடனைப் பிடிக்க உதவிய வலம்புரி,

### அரசும்...

51வது படையணித் தளபதி மேஜர் ஜெனரல் ஜெயசுந்தர, வன்னிப் பிராந்தியத் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, 56வது படையணித் தளபதி பிரிகேடியர் லோறன்ஸ், இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன உளநாட்டு அமைச்சின் செயலாளர் யுனைட் ஆகியோர் ஓமந்தைக்கு வந்தபோது அங்கு படையினர் அணி வகுப்பு மரியாதை வழங்கி வரவேற்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் இவ்வைபவத்தில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி மோட்டார் படையணி சிறப்புத் தளபதி கேணல் பானு, மேற்கு முனைக கட்டளைத் தளபதி கேணல் சேரன், இராணுவப் பிரிவைச் சேர்ந்த சசிக்குமார் அரசியல் நிர்வாகத் துறையைச் சேர்ந்த சுதா யாழ மாவட்ட அரசில் துறைப் பொறுபபாளர் இளம்பரிதி, அரசியல் பிரிவைச் சேர்ந்த புலித்தேவன் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

### வவுனியா அரச அதிபர் தலைமை தாங்கினார்

வவுனியா அரச அதிபர் கே. கணஷ் தலைமையில் இடம்பெற்ற கைதிகள் பரிமாற்ற நிகழ்வின் போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பொறுப்பாளர் மற்றும் சர்வதேச யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் வவுனியாவுக்கான யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள், விடுவிக்கப்பட்ட கைதிக

### புலிகளால்...

களிடத்தில் இல்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். அதேவேளை தென்னிலங்கை மக்கள் விடுதலைப் புலிகளிடம் இன்னமும் பலர் கைதிகளாக இருப்பதாக சந்தேகிக்கின்றார்கள். இது ஒரு பெரிய பிரச்சினையாக எமக்குள்ளது.

இக்கைதிகள் பரிமாற்றம் சமாதான முயற்சிகளுக்கு மிகவும் உந்து சக்தியாகவுள்ளது. கைதிகள் பரிமாற்றத்தில் உதவிய இராணுவத் தளபதி, சிறைச்சாலை ஆணையாளர் மற்றும் அனைவருக்கும் அரசாங்கம் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார். (ம)

### மேலும்...

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறுப்பினர்களும் விரைவில் விடுதலை செய்யப்பட வேணடுமெனக்கூறினர். (ம)

### எழுத்தாளர் வரதருக்கு ''சாஹித்திய இரத்தினம்'' விருது



(யாழ்ப்பாணம்)

முதுபெரும் எழுததாளர் தி.ச.வரதராசன் இலங்கை கலை இலக்கிய கழகத்தின் தமிழிலக்கிய குழுவினால் ''சாஹித்திய இரத்தினம்'' என்னும் கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

நாளை திங்கட்கிழமை பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இவ் விருதினை வழங்கிக கௌரவிக்கவுள்ளார்.50ஆயிரம் ரூபா பெறுமதியான பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது.

இலங்கையில் முதன் முறையாக தமிழ் இலக்கியத் துறைக்கு ''சாஹித்திய இரத்தினம்'' விருது மூத்த எழுத்தாளர் வரதராசனுக்கு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (த)

# பருத்தித்துறையில் இளைஞர் படையினரால் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை அதிஉயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர் படையினரால் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள உறவினர் ஒருவரைப் பார்த்து விட்டுத் திரும்பிய போதே பிரஸ்தாப நபரை படையினர் காவலரணில் வைத்துத் தாக்கியுள்ளனர்.

இவர் குறிப்பிட்ட நேரத்திற்குள் அவ்விடத்தை விட்டு வெளியேறவில்லை என்று காரணம் காட்டியே தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து விடுதலைப் புலிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை இத்தாக்குதல்ச் சம்பவம் குறித்துப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (இ-5)

### விடுதலை செய்யக்கோரி ஒக்டோபர் முதல்

# களுத்துறைக் கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதம்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாயையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

மெனக் கோரியே இச்சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பிக்கவுள்ளனர்.

தம்மைப் பார்வையிட வருபவர்களை இம்முறை நிராகரிப்பதுடன் அவர்கள் கொண்டு

உடன் திருடனைப் பிடிக்க பிரிவு பிரிவுகளாக வந்த வேலணை மேற்கு, புளியங்கூடல், யாழ்ப்பாணம், பருத்தித்துறை இளைஞர களுக்கும், மன்னார் பேசாலை போன்ற இடங்களுக்கு பொறுப பாக நின்ற இந்திரன் அண்ணன், நகுலேஸ்வரன் அவர் களுக்கும், தமிழீழ கடற்புலிகள், தமிழீழ அரசியல் பிரிவினர், தமிழீழ காவற்துறை, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம், எனது நண்பர்கள், உற்றார்கள், உறவினர்கள், நலன்விரும்பிகள், மன்னார் மாவட்ட ஆட்டோ சாரதிகள், இராமேஸ்வரம் இறங்குதுறையில் காத்து நின்ற எமது நண்பர்கள், E.P.D.P உறுப்பினர்கள், வாகனங்கள் தந்துதவிய உத்தமர்கள், கேட்ட நேரத்தில் உடனுக்குடன் செய்திகளை வெளியிட்டு துணிந்து நின்று திருடனைப் பிடிக்க உதவிய வலம்புரி, தினகுரல், கொழும்புத் தினக்குரல், வீரகேசரி பத்திரிகை யாளர்கள, மன்னார் எரிபொருள் நிலைய உரிமையாளர், முகாமையாளர் ஏனைய ஊழியர்கள், அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்பமே சூழ்க. எல்லோரும் வாழ்க.

கு.கங்கைவேணியன்
**வேணி களஞ்சியம்**
165 ,K.K.S றோட்
யாழ்ப்பாணம.

[5948]

## UNIVERSITY OF JAFFNA

**Faculty of Graduate Studies**
**First Semester Examination**
**Post-Graduate Diploma in Public Administration**

***The Listening and the Speech Tests for the English Language Skills Paper of the above examination will be conducted on the following dates.***

| | Date | Time |
|---|---|---|
| *Listening* | 07-10-2002 | 4.30 - 5.30 |
| *Speech* | 08-10-2002 | 4.30 - 6.00 |
| *Speech* | 09-10-2002 | 4.30 - 6.00 |

No further dates could be obtained by the candidates.

Registrar
University of Jaffna
2002-09-27

[C/5044]

கலந்து கொண்டனர்.

### வவுனியா அரச அதிபர் தலைமை தாங்கினார்

வவுனியா அரச அதிபர் கே. கணஷ் தலைமையில் இடம்பெற்ற கைதிகள் பரிமாற்ற நிகழ்வின் போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பொறுப்பாளர் மற்றும் சர் வதேச யுத்த நிறுத்தக் கண்கா ணிப்புக்குழுப் பிரதிநிதிகள் வவு னியாவுக்கான யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி கள், விடுவிக்கப்பட்ட கைதிக ளின் உறவினர்கள், போராளிகள், படையினர்கள் எனப் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

யுத்தக் கைதிகள் பரிமாற்றம் தொடர்பான அரசின் அறிக்கையை பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோ சிங்களத் திலும், ஆங்கிலத்திலும் வாசித் தார். அதன் தமிழாக்கத்தை உள்துறை அமைச்சின் செயலா ளர் வாசித்தார்.

இதேபோல் தமிழீழ விடுத லைப் புலிகளின் அறிக்கையை சுதாமாஸ்ரர் தமிழிலும், புலித் தேவன் ஆங்கிலத்திலும் வாசிக்க போராளி ஒருவர் சிங்களத்தில் வாசித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பிரமுகர்கள் சாதாரண உடையுடனும், இரா ணுவப் பிரிவினர் சீருடையுடனும் காணப்பட்டனர்.

யுத்தக் கைதிகளுக்கு விடுதலைப் புலிகளின் காவல் துறையினரும் சிறிலங்கா இராணு வமும், பொலிஸும் பாதுகாப்பு வழங்கின.

### கட்டித்தழுவி மகிழ்ந்தனர்

விடுவிக்கப்பட்ட கைதிகள் தம் உறவினர்களைக் கண்டதும் உணர்ச்சி மேலிட அவர்களைக் கட்டித் தழுவி மகிழ்ச்சி தெரி வித்தனர். பிரிந்தவர்கள் ஒன்று சேர்ந்த நிகழ்வு அனைவரையும் நெகிழ வைத்தது. (ம)

விடுதலை செய்யக்கோரி ஒக்டோபர் முதல்

# களுத்துறைக் கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதம்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகாலத் தடைச் சட டம் என்பவற்றின் கீழ் விசார ணைகள் இன்றித் தடுத்து வைக் கப்பட்டுள்ளவர்களை உடனடி யாக விடுதலை செய்ய வேண்டு மெனக் கோரியே இச்சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பிக்க வுள்ளனர்.

தம்மைப் பார்வையிட வருப வர்களை இம்முறை நிராகரிப் பதுடன் அவர்கள் கொண்டு வரும் பொருட்களை ஏற்க முடியா தென்றும் தெரிவித்துள்ளனர். இதே வேளை சிறையிலிருந்து விடுத லையான பின்னரே தாம் நீரா காரம் அருந்த முடிவு செய்துள்ள தாகவும் அவர்கள் மேலும் தெரி வித்துள்ளனர். (ந-5)

## பிறந்த நாள் வாழ்த்து



## விசாகரன்

கோவில் வீதி நல்லூரில் வசிக்கும் சந்திரபாலன் நாகேஸ்வரி அவர்களின் செல்வப் புதல்வன் **விசாகரன** தனது முதலாவது பிறந்த நாளை இன்று (29.09.2002) மிக விமர்சையாக கொண்டாடுகின்றார். அவரை சகல செல்வங்களும் பெற்று நீடுழி வாழ விநாயகப் பெருமானை வேண்டி அப்பா, அம்மா, அக்காமார், மாமாமார், அத்தைமார் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

[C/5043]

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.09.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது-